உலக விவகாரங்களை விளக்கும்
ஆக்ஸ்போர்டு சிறு நூல்கள்

இந்தியா

எல். எப். ரஷ்ப்ரூக் வில்லியம்ஸ்
எழுதியது

INDIAN BRANCH

ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி ப்ரெஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்

1941

தமிழில் முதற் பதிப்பு 1941

‘டோமினியன்’ பதவி

அரசியற் கொள்கையின் மேன்மையாலும் ஆயுத பலத்தாலும் ‘பிரிட்டன்’ தேசமானது உலகெங்கும் பரவியுள்ள சாம்ராச்சிய பதவியைப் பெற்றுள்ளது. இச் சாம்ராச்சியத்திலே சேர்ந்து சமத்துவம் பெற்ற நாடுகள் உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு நடவடிக்கைகளிலும் சுயேச்சாதிகாரம் பெற்றனவாயினும், பிரிட்டிஷ் செங்கோலின் கீழ் சுயேச்சைப்படி ஒன்ருெடொன்று நெருங்கி உறவாடுகின்றன. இந்த நாடுகளின் தொகுதியை ‘பிரிட்டிஷ் காமன் வெல்த் அவ் நேஷன்ஸ்’ என்பர். இவ்வாறு ஒன்று சேர்ந்த நாடுகளோடு இந்தியா ஓர் அங்கமாகச் சேர முடியுமா? மேனுட்டு நாகரிகத்தினின்றும் மாறுபட்ட நாகரிகத்தையுடைய இந்திய ஜன சமூகங்கள் ‘காமன்வெல்த்’ என்னும் அகன்ற மண்டலத்துள் வாழ இசைவார்களா? இது எவ்வாருயினும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் உத்தேசம் இந்தியா மேற்கூறிய ‘டொமினியன்’ பதவியைப் பெற வேண்டும் என்பதே.

‘டொமினியன்’ பதவியினுல் இந்தியாவிற்கு உள்நாட்டு விஷயங்களிலே சுய ஆட்சியும் வெளிநாட்டு விஷயங்களிலே பாதுகாப்பும் கிடைக்கும். ‘டொமினியன்’ பதவியைப் பற்றிய பிரச்சினை இந்தியாவையும் பர்மாவையும் மட்டும் பாதிப்பது அன்று. சுய ஆட்சி பெற்ற ‘டொமினியன்’ களோடு இந்தியாவும் சேர்ந்துகொண்டால், அவ்விதச் சேர்க்கையானது மேனுட்டு நாகரிகம், கீழ்நாட்டு நாகரிகம் ஆகிய இரண்டையும் ஒன்ருேடொன்று சேர்க்கும் பாலம்போல் உதவும். அதன் பயனுக, உலக மக்களிடையே சினேகமும் நன் மதிப்பும் அதிகப்படும்; உலகமெங்கும் அமைதி நிலைப்பதற்கு இந்தியர் மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாக உதவி செய்தவர்கள் ஆவர். இத்தகைய நல்ல காரியத்தைச் செய்து முடிப்பது எப்படி? இந்த நல்ல வேலையிலே நாம் பங்கெடுத்

துக்கொள்வதற்குமுன், இந்தியா, பிரிட்டன் ஆகிய இரண்டு தேசங்களின் தற்கால நிலைமைகளை நன்குணரவேண்டும்; இரு திறத்தாருக்கும் உள்ள கஷ்டங்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்திய தேசீய இயக்கம்

இந்தியாவிலே உலவிவரும் பிரச்சினைகள் பலவும் தேசீய இயக்கத்தோடு சம்பந்தப்பட்டன. பிறநாடுகளில் உள்ளது போலவே, இந்தியாவிலும் தேசீயம் என்பது ஒரு வகை உணர்ச்சியே. இவ்வுணர்ச்சி தெய்வ பக்தி போன்றது; பகுத்தறிவுக்குக் கட்டுப்படாதது; ஒரு விதத்தில், இது அதிகச் சக்தி உடையது; வேறு வகையில், மிக்க பலங் குறைந்தது. தேசீய உணர்ச்சியால் தேசீயவாதி அதிக ஊக்கத்தையும் சக்தியையும் பெறுகிறான். ஆனால் உணர்ச்சி மேலிடுவதால், அவன் மதி மயங்கி தீராத தொல்லைகளோடு மன்றாடுகிறான். இதுவே, தற்காலத்தில் இந்தியாவிலுள்ள நிலைமை. தேசீயவுணர்ச்சியால் மக்களுக்கு ஊக்கம் அதிகப்பட்டாலும், பல இடையூறுகள் இன்னும் முன்னேற்றத்திற்குத் தடை செய்து கொண்டே இருக்கின்றன.

இந்தியாவிலே ஜனப்பிரிவுகள் பல; சாதிகள் பல; பாஷைகள் பல. இது கொண்டு, ஒரு சிலர், 'இந்தியா என்பது பூகோள சாஸ்திரம் கற்றோர் ஒரு நிலப்பகுதிக்கு இட்ட பெயர்; 'இந்தியா' என்று ஒரு தேசம் இல்லை. வங்காளிகள், ராஜபுத்திரர், பஞ்சாபிகள், குஜராத்திகள், மராட்டியர், சீக்கியர், பார்ஸிகள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர் என்று பல தொகுதிகள் உண்டு; ஆனால் இந்தியர் என்று ஒரு தொகுதி இல்லை; உண்மையிலே, 'இந்தியா' என்று ஒன்று இல்லை' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக் கொள்கையை இன்று எவரும் வற்புறுத்துவதில்லை. ஏனென்றால், சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக நிகழும் ராஜீயப் போராட்டத்தாலே ஓர் உண்மை நன்றாக விளங்கிவிட்டது: பலவகைப்பட்ட இந்திய மக்களுக்கிடையே ஒவ்வொரு விஷயத்திலும் அபிப்பிராயபேதம் இருந்தாலும், அவர்கள் அனை

வரும் ஐக்கிய உணர்ச்சியுடையவர்களாய் 'பிரிட்டிஷார் வேறு, தாங்கள் வேறு' என்பதை உணர்ந்து, பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்றுக்கொள்ள மனம் இல்லை என்பதை விளங்கக் காட்டுகிறார்கள்.

ஹிந்துக்களின் மனப்பான்மை

மானுட வாழ்க்கையைப்பற்றி நாம் என்ன அபிப்பிராயம் கொள்கிறோமோ, அதற்கு இணங்கவே நம்முடைய சுபாவமும் மாறிவிடுகின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள மேனாடுகளிலே அரசியற் கொள்கைகளிலே பல வித்தியாசங்கள் இருந்தாலும், அங்கெல்லாம் வாழ்க்கையைப்பற்றி வழங்கும் அபிப்பிராயம் ஒன்றே. அந்த அபிப்பிராயம் கிரேக்க தத்துவ ஞானிகளான 'ஸோபிஸ்ட்' (*Sophists*) களிடமிருந்து வந்தது. 'மனிதன் சிருஷ்டியின் சிகரம் போன்றவன்'; 'மனிதன் வேறு; இதர ஜீவன்கள் வேறு. இயற்கைச் சக்திகளை அடக்கியாளும் திறமை மனிதனுக்கே உண்டு; எதையும் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து அறியும் சக்தியும் மனிதனிடமே அமைந்துள்ளது. மற்றைப் பிறவிகளைவிட மனிதப் பிறவியே சிறப்புற்றது, குற்றங் குறைகள் இன்றி அமைந்தது' என்பது அவர்களது கொள்கை. ஹிந்துக்களின் அபிப்பிராயமோ, (முகம்மதியரின் அபிப்பிராயம் பின்பு கூறப்படும்) இதற்கு முற்றிலும் மாறுபட்டது. இவ்வகன்ற உலகிலே மானுடன் ஒரு சிறு துளிபோன்றவன். இவ்வுலகமோ ஒருவராலும் இயற்றப்படாத சாசுவத விதிகளின்படி செல்கின்றது. தேவர்கள்கூட இந்த விதிகளால் கட்டப்பட்டவர்களே. மனிதனுக்குத் தனிச்சிறப்பு ஒன்றும் இல்லை. அவனும் அனாதி சக்திகளால் இயக்கப்பட்டு, உலகிலே சிறிதுகாலம் தோன்றி மறைபவனே. இச்சென்மத்திற்குத் தனிப்பட்ட பெருமையொன்றும் இல்லை. எத்தனையோ சென்மங்கள் எடுத்தாயிற்று; இன்னும் எத்தனையோ சென்மங்கள் எடுத்தாகவேண்டும். சென்ம சென்மாந்தரங்களான தொடர் சங்கிலியிலே இந்தச் சென்மம் ஒரு வளையம். மேலும், மனிதன் தனிப்பட்ட சிருஷ்டியல்லன்; மற்றோன்

றிலே இணைக்கப்பட்ட பகுதியாவான். பிருமாண்டத்தின் பகுதி பூமண்டலம்; அதன் பகுதி மானுடவர்க்கம்; அதில் ஒரு பகுதியே, தான் பிறந்துள்ள சாதி ('சாதி'யோ தெய்வத்தால் வகுக்கப்பட்டது); தான் வாழும் கிராம சமுதாயமும் அப்படியே. அதன் உட்பிரிவே தான் பிறந்த குடும்பம். இவ்வகைப் பகுதிகளைத் தவிர்த்து, தனக்கு என்று ஒரு தன்மை கிடையாது; தனியுரிமையும் இல்லை.

இக்கொள்கைகளின் பயனாக, இந்திய சர்க்காரின் வேலை வேறு, ஐரோப்பிய அரசாங்கங்களின் வேலை வேறு என்பதாயிற்று. அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்ற வேலைகளை இந்தியாவிலே குடும்பத் தலைவனும் கிராம சமுதாயமும் சாதிச்சபையும் செய்து வந்தன. பிரிட்டிஷார் வருவதற்கு முன்பு, தனிப்பட்ட நபர்களோடு அரசாங்கத்திற்கு யாதொரு சம்பந்தமும் இல்லாதிருந்தது. அரசாங்கம் என்பது கிராமம், சாதி, குடும்பம் முதலியவற்றைப்போல இயற்கையிலே அமையாமல் மனிதர்களால் அமைத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஏற்பாடு என்றே ஹிந்துக்கள் எண்ணுகிறார்கள்.

சாதி

மேற்கூறிய இயற்கைப் பிரிவினைகளுள் சாதி என்பது இந்தியாவிற்கே விசேஷமாக அமைந்தது. 'சமையல், சாப்பாடு, விவாகம் முதலிய காரியங்களிலே ஒன்றோடொன்று கலவாது தனித்தனியாக வாழும் இரண்டாயிரம் வகுப்புகளாக ஜன சமூகத்தைப் பிரிப்பதுதான் சாதி என்பதின் முக்கிய இலட்சணம்' என்று மேனாட்டார் எண்ணுகிறார்கள். ஆனால், கட்டுப்படுத்தும் சக்தி சாதிக்கு உண்டு; அதனால், ஒருவன் தன் சாதிக்குரிய மதக் கோட்பாடுகளுக்கு அடங்குகிறான்; தன் சாதியினருக்குக் குருக்களாக உள்ளவர்களை வணங்குகிறான்; தன் சாதியாசாரங்களின்படி நடக்கிறான்; பிற சாதிகளின் ஆசாரங்களுக்கு மரியாதை செய்கிறான்; சாதிக் கட்டுப்பாட்டின் சக்தியால் பல சாதிகளும் ஒன்றுபட்டு இருப்பதைக் காட்டுகிறான்.

சாதிப் பாகுபாடு ஒரு கொடுமை என்றே மேனாட்டா

ருக்குத் தோன்றும். ஒருவனுடைய அந்தஸ்து அவன் எந்த சாதியிலே பிறந்தான் என்பதைக் கொண்டு நிர்ணயிக்கப் படுகிறது. ஒருவனுக்கு, செல்வ நிலையோடு செல்வாக்கும் அனேகமாய்ப் பிறவியாலே ஏற்படுகிறது. ஆகாரம், விவாகம், அலுவல், பழக்க வழக்கங்கள் எல்லாவற்றிலும் தான் பிறந்த சாதியின் விதிகளின்படி நடந்து கொள்ளவேண்டும். மேலும் சாதிப் பாகுபாட்டிற்குப் புறம்பாகக் கருதப்படும் (ஷெடியூல்ட்) 'ஒதுக்கப்பட்ட' வகுப்புகளில் ஒன்றிலே பிறந்துவிட்டாலோ, அவனுக்கு விமோசனமில்லாத இழிவும் தாழ்வும் சமீபகாலம் வரையிலும் விதிக்கப்பட்டிருந்தன. இப்பொழுதுதான், கற்றறிந்த ஹிந்துக்கள் பலர் இக்கொடுமையை நீக்குவதற்குப் பெரிதும் முயன்று வருகிறார்கள்.

சாதி என்பது ஹிந்து சமூகத்திலே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்த வந்தது அன்று. சமூகத்தின் பல பகுதிகளும் ஒரே யந்திரத்தின் பல பாகங்களைப்போல ஒருமித்து இயங்கி வேலை செய்வதற்காகவே, ஒவ்வொரு பகுதிக்கும் பிரத்தியேகமான தொழிலை விதிக்கும் நோக்கமுடையது சாதி என்பதை நாம் அவசியம் அறிந்துகொள்ளவேண்டும். ஆனால், காலத்திற்கு ஏற்றவாறு, சீவனத் தொழிலைப்பற்றிய விதிகள் பல சந்தர்ப்பங்களிலே தளர்த்தப்பட்டிருக்கின்றன.

கிராம சமுதாயமும் குடும்பமும்

கிராம சமுதாயம், காலத்தால் சாதிக் கட்டுப்பாட்டுக்கு முந்தியது என்னலாம். இந்தியாவிலே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கிராமங்களிலேதான் வசிக்கிறார்கள். ஆகையால் கிராம சமுதாயத்தைப்பற்றி அறிந்து கொள்வது அவசியம். ஆதியில், ஒவ்வொரு கிராமமும் வெளியதிகாரத்திற்கு இடந்தாராததாய், சுய ஆட்சியுடையதாய் இருந்திருக்கலாம். ஆயினும், மிகப் பழைய நீதி நூல்களான ஸம்ஸ்கிருத ஸ்மிருதிகளிலேயும் கிராம அதிகாரிகளை அரசாங்கத்தாரே நியமித்தார்கள் என்ற குறிப்பு காணப்படுகின்றது. அப்படியிருந்தும், 'பிரிட்டிஷாரே கிராம சமுதாயங்கள் அழிந்ததற்குக் கார

ணம் ஆனுர்கள்; ஏனென்ருல், அவர்களே கிராம அதிகாரிகளை நியமிக்கிருர்கள்' என்று சிலர் குறை கூறுகிருர்கள். ஆதிகாலந் தொட்டு நடைபெற்று வந்த முறையைத்தான் பிரிட்டிஷாரும் கைக்கொண்டனர் என்பதை இவர்கள் மறந்து விடுகிருர்கள். இந்தியாவிலே பலவிடங்களில் இன்றும் பல கிராம சமுதாயங்கள் பண்டைப் பெருமைகளோடும் அதிகாரங்களோடும் இருப்பதைக் காணலாம். இவை தங்களுக்குத் தேவையான 'போலீஸ்' பந்தோபஸ்தைத் தாமே செய்து கொள்கின்றன; கிராமப் பொதுச் செலவிற்கு வேண்டிய தொகைகளைத் தாமே வரிகள் விதித்து வசூலிக்கின்றன; வியாச்சியங்களை விசாரணை செய்து தீர்ப்பளிக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், கிராம சபைகளுக்கு அதிகாரம் உண்டு.

இந்தியாவிலே, பலர் ஏககுடும்பமாக ஒன்றுசேர்ந்து வாழ்கிருர்கள்; ஒவ்வொருவனும், தனிக் குடித்தனமாகத் தன்மனைவி மக்களுடன் மட்டுமே வாழ வேண்டுமென்று நினைப்பதில்லை. பாட்டன்மார், பாட்டிமார், சிற்றப்பன்மார், பிள்ளைகள், பேரன்மார், இவர்களுடைய மனைவியரும், மக்களும்—இப்படியாகப் பலர் ஒன்றுசேர்ந்து ஏக குடும்பமாக வாழ்கிருர்கள். எல்லோருடைய வருமானத்தையும் ஒன்ருகச் சேர்த்து எல்லோருமாக அனுபவிக்கிருர்கள். தற்காலத்துக் குடும்பங்களிலே சில குடும்பக் கட்டுகள் தளர்ந்திருப்பினும், இத்தகைய பெருங் குடும்பங்கள் இன்னும் பிரபலமாகவே இருந்துவருகின்றன. அரசியல் திட்டத்தைக் காட்டினும் குடும்ப வாழ்க்கையே ஹிந்துக்களுடைய வாழ்க்கை நலத்தை நிர்ணயிப்பதாகின்றது.

முஸ்லீம்களின் மனப்பான்மை

இந்தியர்களுள் நூற்றுக்கு 68 பேர்களின் மனப்பான்மை இவ்வாறு இருப்பினும், மற்றையோருள் பெரும் பகுதியினரான எட்டுக்கோடி முஸ்லீம்களின் மனப்பான்மை வேறு வகைப்பட்டது. இது மேனுட்டாரின் மனப்பான்மையை ஒத்திருப்பது. 'தெய்வம் ஒன்றே; அது சர்வ சக்தியுள்ளது'

என்றும், 'மானுடவர்க்கத்தில் சாதி வித்தியாசம் இல்லை; எல்லோரும் சமம்' என்றும், 'மானுடவர்க்கம் ஜீவராசிகளிலே தலைமைபெற்று உயர்ந்தது' என்றும் முஸ்லீம்கள் திடமாக நம்புகிறார்கள். எனவே, இவர்களது கொள்கைகளுக்கும் ஹிந்துக்களின் கொள்கைகளுக்கும் அடிப்படையான முரண்பாடு உண்டு.

இஸ்லாமிய மதம் இந்தியாவிற்கு வந்து வெகுகாலம் ஆகவில்லை. இம் மதம் ஏழாவது நூற்றாண்டிலேதான் தோன்றிற்று; பிரபலமாவதற்கு, பதின்மூன்றாம் நூற்றாண்டு வரைச் சென்றது. ஆயினும் அதுமுதல், அதிகாரம் கை மாறி பிரிட்டிஷாரிடம் வரும் வரையிலே, வட இந்தியாவிலே முஸ்லீம்களது ஆட்சி இருந்தது. இங்கே இன்றும் முஸ்லீம்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். முஸ்லீம் ஆட்சியின் பயனாக நாடெங்கும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. 13-வது நூற்றாண்டு தொடங்கி, 18-வது நூற்றாண்டுவரை இந்தியாவை ஆண்டுவந்த வல்லரசுகள் அனைத்தும் முஸ்லீம் அரசுகளேயாம். இதற்குக் காரணம், வடமேற்குக் கணவாய்களின் வழியே இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தவர்கள் அனைவரும் முஸ்லீம் மதத்தினராய் இருந்ததேயாகும். தென் இந்தியாவிலும் பல முஸ்லீம் இராச்சியங்கள் இருந்தன. எனவே, 'இந்திய முஸ்லீம்'கள் பரம்பரையாக இந்தியாவிலே அரசு செலுத்தியவர்களின் சந்ததியார் ஆவர்; ஆதலால், ஜனப் பெருக்கமுள்ள ஹிந்துக்களின் கீழ் வாழ விரும்பாதவர்களாய், புது அரசியல் திட்டங்களால் ஒருவேளை அப்படி வாழவேண்டி வருமோ என்று பயந்து, அத் திட்டங்களை வேண்டாமென்று நிராகரிக்கிறார்கள்.

ஹிந்து நாகரிகம் பலவாறு பிளவுபட்டுள்ளது; முஸ்லீம்களின் நாகரிகமோ, கருத்து ஒற்றுமையால் அதிகப் பலங் கொண்டதாய் உள்ளது. இந்திய முஸ்லீம்கள் பிற நாட்டு முஸ்லீம்களோடு உறவாடுகிறார்கள்; எல்லைப் புறம் ஆப்கானிஸ்தானம், மத்திய ஆசியா முதலிய இடங்களிலே வாழும் முஸ்லீம்களின் ஆதரவைப் பெற்று, பிரிட்டிஷாரின் அதிகாரம் நீங்கியவுடனே தாங்களே மீண்டும் அரசு செலுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்தை அமைப்பதிலுள்ள கஷ்டங்கள்

இந்திய சரித்திரத்தைக் கற்போருக்கு ஓர் அதிசயம் புலப்படும். இந்தியா முழுவதையும் மத்தியமான இடத்தி லிருந்துகொண்டு இதுவரை எவரும் ஆண்டதில்லை. மத் திய ஆட்சி என்பது அடையவொண்ணாத இலட்சிய மாகவே இருந்துவருகிறது. பிரிட்டிஷாரே இந்த இலட்சி யத்தைக் கைக்கொண்டு ஒருவாறு நடைமுறையில் அமைத் தார்கள் என்னலாம். அவர்களும் இந்த வேலையிலே வெற்றி பெறவில்லை. இன்றும் இந்தியாவில் மூன்றில் இரண்டு பாகத் திற்குக் குறைவாகவே இந்திய சர்க்காரின் ஆளுகையில் இருக்கிறது. மற்றைப் பாகம் 'இந்திய மன்னர்' எனப்படும் பல அரசர்களின் ஆளுகையிலே உள்ளது. இந்தியாவிலே முன்பு இருந்த அரசாங்கங்களை நாடு முழுவதையும் நேராக ஆள வொட்டாது தடைசெய்தது எது? இது ஆராய்ந்து அறியத்தக்கது. ஏனெனில், இந்தியா ஒரு தனி இராச்சிய மாக ஒன்றுபடாதவாறு தடைசெய்யுங் காரணங்களை நீக்கா விட்டால், பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திலே இந்தியா சுயேச் சாதிகாரம் பெற்ற நாடாகக் கலந்துகொண்டு 'டொமினியன்' பதவியைப் பெறுவதற்கு அக்காரணங்கள் தீராத இடையூறு களாகிவிடும்.

ஆனாலும், இந்தக் கேள்விக்கு இச் சிறு நூலிலே விரி வாக விடைகூற இயலாது. முற்காலத்தில் இந்தியர்கள் தாம் வாழ்ந்த நிலப்பகுதியின் நன்மையை மட்டும் கோரு வோராய் குறுகிய தேசபக்தி யுடையவராய் இருந்தனர்; சாதி, பாஷை, நாகரிகம் முதலியவற்றில் பல வித்தியாசங்கள் அந்த அந்தப் பிரதேசங்களிலே காலப் போக்கிலே தோன் றின. இவையும் மத்திய ஆட்சிக்கு இடையூறுகள் ஆயின.

ராஜபுத்திரர், சிக்கியர், மராட்டியர் முதலிய சில வகுப் பார் தங்கள் கியாதியை இந்திய சரித்திரத்திலே பொன்னு லான எழுத்துக்களால் எழுதியவர்களின் சந்ததியிற் பிறந்த வர்கள். வங்காளிகள் முதலிய சில வகுப்பார் பல கலைகளிலும் தேர்ச்சிபெற்று அபூர்வமான சிற்பங்களை அமைத்து அழியாப்

புகழை நிலை நாட்டியவர்கள். திராவிட பாஷைகளைப் பேசும் தென் இந்தியர்கள், குஜராத்தி பேசும் மேற்கத்தியார் முதலியவர்கள் கிறுஸ்து பிறப்பதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே தொடங்கி நாளது வரையிலும் கடல் கடந்து சென்றும் உள் நாட்டிலே ஊரூராகச் சென்றும் வியாபாரஞ் செய்து வருகின்றனர். இன்னும் எத்தனை வகைச் சனங்கள்! 'கல் ஊழி' தொடங்கி இருபதாவது நூற்றூண்டு வரையிலும் உலகிலே தோன்றிய பல நாகரிகங்களுக்கும் நிதர்சனங்களானார்கள். இந்தியாவும் பலதிறப்பட்ட சாதிகளையும் நாகரிகங்களையும் காண விரும்புவோர்க்கு ஏற்றதொரு கண் காட்சிச்சாலை யாகிவிட்டது.

அடுத்தடுத்து வந்த படையெடுப்புகளின் பயன்

இவ்வாறு பல வேறு சாதிகளும் சனங்களும் பாஷைகளும் இந்தியாவிலே குழம்பிக் கலந்திருப்பதற்குக் காரணம் என்ன என்றால், இந்திய சரித்திரமே அடுத்தடுத்து வந்த படையெடுப்புகளின் சரித்திரமாக அமைந் திருப்பதுதான். இந்தப் படையெடுப்புகளில் ஒன்றுக்குமே, புதிதாகக் குடியேறினவர்களையும் அவர்களாற் செயிக்கப் பட்டவர்களையும் ஒன்றாக்கும் வன்மை இல்லை. இந்திய நாடோ மிகவும் அகன்ற பிரதேசம். படையெடுத்து வந்தவர்களால் முன்புள்ளோரை முற்றிலும் அழிக்க முடியவில்லை. அவர்களும், தங்களைப் பின்தொடர்ந்து வர முடியாத காடு மேடுகளில் குடியேறினார்கள்; அவர்களை அழிப்பதிலும் அடக்கியாளுதல் எளிதாயிற்று. ஆகவே, அலையலையாகப் படையெடுத்து வந்த சாதியினர் பலரும் பிறருடன் கலவாது தனித்தனியாக வாழ்வதை இன்றும் காணலாம். இவர்களை ஒருவரோடு ஒருவர் கலக்கவொட்டாமல் தடுப்பதற்கு, சாதிக் கட்டுப்பாடும் அனுகூலமாயிருந்தது. கிராம சமூகம், குடும்பவொற்றுமை, சாதிக் கட்டுப்பாடு இவைகளுக்கிருந்த பலங்கூட அரசாங்கத்திற்கு இல்லாதிருந்ததால், இந்திய சனங்கள் ஒன்று படாமல் சாதி வேற்றுமைகளாலும் நாகரிக வேற்றுமைகளாலும் வேறு வேறு இனத்தார் ஆகி, சிறு சிறு தொகுதிகளாகப் பிரிந்தனர்.

இந்தியாவை ஒற்றுமைப்படுத்தி ஒரே இராச்சியம் ஆக்குவதைத் தடைசெய்யும் இடையூறுகள் என்றுமே உண்டு. படையெடுப்புகளும் உள் நாட்டுக் குழப்பங்களும் இல்லாமல் நாடு நீண்டகாலம் அமைதி பெற்றிருந்தால், இதுவரை நாட்டிலே குடியேறியுள்ளவர்கள் அனைவரும் தங்களிடையே காணப்படும் வேற்றுமைகளை ஒருவாறு நீக்கிக்கொண்டு ஒரு நாட்டு மக்களாக வாழவேண்டும் என்று விரும்பக்கூடும். ஆனால் எப்பொழுதேனும், அபூர்வமாய், இத்தகைய அமைதி நிலை நீண்டகாலம் இருந்து, நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சி உண்டானால், அப்பொழுதே திடீரென்று ஒரு புதிய படையெடுப்பு வந்துவிடும். பிரிவுபட்டுத் தனித்தனியாக வாழ்ந்து வந்த மக்களோ அந்தப் படையெடுப்பைத் தடுப்பதற்குக்கூட ஒன்று சேராமல் இருந்து விடுவார்கள்.

இந்திய சரித்திரத்தால் அறியப்படும் விஷயங்கள்

தற்கால இந்தியாவிற்குப் பயன் தரக்கூடிய பல படிப்பினைகளை இந்திய சரித்திரத்தால் அறியலாம். இப்படிப்பினைகள் தற்காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவக்கூடும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். ஒற்றுமைப்பட்ட 'தேசிய சாதி' என்று ஒன்று இந்நாட்டிலே எழுவதற்கு வழியில்லை. வெவ்வேறான சாதிகள் பலவும், ஒன்றோடொன்று கலவாது, தனித்தனியாக வெகுகாலமாக வாழ்ந்து வருகின்றன. அரசியலை ஐக்கியப் படுத்துவதற்காக வகுக்கப்படும் எந்தத் திட்டத்திலும் வேறுபட்ட சாதிகள் அனைத்திற்கும் தனித்தனி ஸ்தானம் அளிக்கவேண்டும். 1935-வது வருஷத்து 'கவர்ண்மெண்ட் அவ் இந்தியா ஆக்ட்'டிலே அரசியலைச் சமஷ்டி திட்டமாக அமைத்ததற்கு இதுவே முக்கிய காரணம்.

மேலும், சரித்திர அனுபவங்களால் பயன் ஒன்றும் இல்லை என்று கொண்டாலொழிய, அரசியல் ஐக்கியம் ஏற்படுத்துவதற்கு இரண்டு நிபந்தனைகள் இருப்பதை மறுக்க முடியாது. அவையாவன, வெளிநாட்டுப் படையெடுப்பின்றியிருத்தலும் உள்நாட்டுக் கலகங்களின்றி யிருத்தலுமே.

இவையிரண்டும் ஒரே காலத்தில் வாய்க்கவேண்டும். அப்படி வாய்த்தாலன்றி நாகரிக ஒற்றுமையால் மட்டுமே எதையும் சாதிக்க முடியாது; இவை ஒருங்கே வாய்த்து விட்டாலோ, நாகரீக ஒற்றுமையும் சக்தி வாய்ந்த தேசீய ஆட்சியும் ஏற்படக்கூடும். நீண்டகாலமாக இந்தியாவில் இருந்துவரும் அமைதி நிலைமையே தேசீய இயக்கத்தை நாட்டிலே நிலைக்கச் செய்தது. 'பிரிட்டிஷ் காமன்வெல்த்' நாடுகளிலேயும் இவ்வாறே நிகழ்ந்தது; பிரிட்டிஷார், நாஜி ஜெர்மானியரைப் போலல்லாது, யாதொரு படாடோபமும் இன்றி, தாங்கள் அரசு செலுத்தும் நாடுகளிலே சுய ஆட்சி ஏற்படுவதை ஆதரித்து வந்திருக்கிறார்கள். சுதேசத்தலைவர்கள் ஆங்காங்கு தோன்றுமாறு செய்வதே அவர்களது கருத்து. தலைவர்கள் தோன்றியபோது, அவர்களோடு நடந்துகொள்ளுகையில் அடிக்கடி பிசகுகள் செய்தாலும், தலைவர்கள் தோன்றுவதை அவர்கள் எப்பொழுதும் விரும்பி வரவேற்கிறார்கள். தலைவர்கள் தோன்றினால்மட்டுமே தாங்கள் நடத்திய அரசாட்சி முழுப்பயன் அளித்ததாகும் என்பதை பிரிட்டிஷார் நன்கறிவார்கள்.

இந்தியாவைப் பாதுகாப்பதிலுள்ள கஷ்டங்கள்

வெளிநாட்டுப் படையெடுப்புகளாலும் உள்நாட்டுக் கலகங்களாலும் அபாயம் நேரக்கூடிய நிலைமையிலேதான் இந்தியா இருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும். இந்தியாவிலே அரசு செலுத்தியவர்கள் அனைவருக்கும் இந்நாட்டைப் பாதுகாப்பது எப்படி என்பதுதான் ஓயாக் கவலையாக இருந்தது. பிரிட்டிஷாருக்கும் இந்தக் கவலை நீங்கவில்லை. கப்பற்படையே ஆதிக்கம் பெற்ற இக்காலத்திலே, இந்தியப் பாதுகாப்பிற்குக் கப்பற்படை அவசியமாயிற்று. இந்தியா மிகவும் நீண்டதான கடற்கரையை யுடையது; துறைமுகம் முதலிய வசதிகளும் அதிகம் இல்லை. கப்பல்கள் மூலமாய் வியாபாரப் போக்குவரவும் ஜாஸ்தி. 'பிரிட்டிஷ் காமன்வெல்த்'திலே இந்தியா சேர்ந்திருப்பதாலேதான், இந்தியாவிற்குப் பாதுகாப்பு ஏற்பட்டது. பிரிட்டிஷ் கப்பற்

படையின் நிழலிலே இந்தியக் கப்பற்படையொன்று பிறந்து 'காமன்வெல்த்'தின் முக்கிய படைகளுள் ஒன்றாக வளர்ந்து விட்டது. கடல்களை ஆளும் திறமைக்குச் சிறிது காலம் பங்கம் ஏற்பட்டாலும் அதனால் எவ்வளவு அபாயம் நேரிடும் என்பதை, சென்ற யுத்தத்திலே 'எம்டென்' கப்பல் செய்த செய்கைகளால் அறிந்து கொள்ளலாம். கடலிலும் செல்லும் பிரிட்டிஷ் அதிகாரத்தால் இந்தியா பாதுகாக்கப் பெறாவிடின், கப்பற்படைகொண்டு யார் வந்துதாக்கினாலும் இந்தியா அவர்களது வசமாகி விடக்கூடும்.

ஆயினும், இந்தியப் பாதுகாப்பு விஷயமாக முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது தரைமார்க்கமாக வரக்கூடிய படையெடுப்புகளை எவ்வாறு தடுப்பது என்பதே. கொள்ளையடித்துச் சிவிக்கும் சனங்கள் பல நூற்றாண்டுகளாக இந்தியாவிற்குள் புகுந்த வாசல்கள் வடமேற்குத் திசையிலே உள்ளன. இன்றும் உள்ளே புகுந்து கொள்ளையடிக்க விரும்பும் சனங்கள் லக்ஷக்கணக்கிலே இவ் வாசல்களுக்கு அப்பால் வசிக்கிறார்கள். சுமார் 50,000 பிரிட்டிஷ் போர்வீரர்களும் 1,50,000 இந்திய சிப்பாய்களும் இந்த வாசல்களைக் காத்து நிற்பதாலேதான் இவர்கள் சும்மா இருக்கிறார்கள்.

ஒரு பிரிட்டிஷ் போர்வீரனுக்கு இந்திய சிப்பாயைக்காட்டிலும் மூன்று நான்கு மடங்கு அதிகம் செலவு ஆகிறது. இவ்வளவு செலவு செய்வது எதற்கு என்று இந்திய தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். 'அதிகப்படியாக செலவுசெய்ய முடியாது; இந்திய சிப்பாய்களே போதும்' என்று இவர்கள் சொல்கிறார்கள். இஷ்டம் போல் பேச யார்க்கும் உரிமையுண்டு. ஆனால், இந்திய சரித்திரத்தைப் படித்தால் இவ்விதப் பேச்சுக்கு இடமில்லை என்பது தெளிவாகும். இவ்வாறு பேசுவோர் இரண்டு முக்கிய விஷயங்களைக் கவனிப்பதில்லை. இந்திய சிப்பாய்கள் குறிப்பிட்ட சிலசாதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது ஒன்று. இச்சாதியினர் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள். மற்றொரு விஷயம் வருமாறு: இந்தியாவிலே பிரிட்டிஷ் போர்வீரன் இருக்கவேண்டி நேர்ந்தது அவனுடைய போர்த்திறமையால் மட்டும் அன்று;

யாதொரு பட்சபாதமும் இன்றி, நாட்டிலுள்ள சாதிமதச் சச்சரவுகளிலே கலந்து கொள்ளாமல் பொது மக்களுக்கு நம்பிக்கை யுண்டாகும் விதத்திலே தன் கடமையைச் செலுத்தக்கூடியவன் என்பதே பிரிட்டிஷ் போர்வீரன் இந்தியப்படையிலே இருப்பதற்குக் காரணம். இந்த இரண்டு விஷயங்களையும் இங்கே சற்று விரித்துக் கூறுதல் பொருந்தும். ஏனெனில், இப்பொழுது நாம் ஆராயப்புகும் உள்நாட்டு அமைதி நிலைமை என்னும் விஷயத்தோடு இவை நெருங்கிய சம்பந்த முடையவை.

போர் வீரமுள்ள சாதியரும் போர் வீரமில்லாச் சாதியரும்

இவ்வகைப் பாகுபாட்டைக்கண்டு இந்தியத் தலைவர்கள் கோபங் கொள்ளக்கூடும் என்றாலும், இவ்விதப் பாகுபாடு சரித்திர ஆராய்ச்சி செய்வோர்க்கு எளிதிற் புலப்படக் கூடியதே. இந்திய மக்களுள் பெரும்பாலோர்க்கு, போர் செய்ய விருப்பமோ போர்த்திறனோ கிடையாது. போர் புரிவதையே தொழிலாகக் கொண்ட சாதியினரின் தொகை மிகச் சொற்பம். மற்றையோர் தங்களுக்குச் சாதித் தொழிலாக விதிக்கப்படாத போர்த் தொழிலைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஆயினும், சிற்சில இடங்களிலும் சிற்சில சாதிகளிலும் நல்ல போர்வீரர்கள் தோன்றுகிறார்கள். அனேக இந்திய சம்ஸ்தானங்களிலே போர்வீரம் படைத்த சாதியினர் உண்டு; அவர்கள் கட்சிப் பிரதிகட்சியாகப் பிரிந்து போட்டிபோடுவதும் உண்டு. இவ்வாறு வமிச பரம்பரையாக, போர்த்திறமை வாய்ந்தவர்களாய் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவின் வடபாகத்தில் போர் வீரம் படைத்த சாதிகள் பல இருக்கின்றன. இது எதிர் பார்க்கக் கூடியதே. அலைமேல் அலையாகப் படையெடுத்து வந்தவர்கள் அனைவரும் இங்கேதான் குடியேறினார்கள். அரசுரிமை அடிக்கடி கைமாறியதும் இங்கே நிகழ்ந்த போர்களாலேதான். இந்தியச் சேனையிலே நூற்றுக்கு 77 பேர், வடமேற்கு மாகாணம், பஞ்சாப் (இங்கிருந்து வந்தவர்கள் மட்டுமே நூற்றுக்கு 62

பேர்) ஐக்கிய மாகாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் இக்காரணத்தாலேயே. இந்தியாவின் மற்றப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் நூற்றுக்கு 23 பேர்தான். ஐந்து கோடி சனங்கள் வாழும் வங்காளத்திலிருந்து வந்த சிப்பாய்கள் மிகமிகச் சிலரேயாவர்.

ஆகவே, போர்த்தொழிற் சாதி, போர்த்திறமை யில்லாச்சாதி என்ற பாகுபாடு தெளிவாக அமைந்துள்ளது. போர்த்தொழிற் சாதியார் படிப்பில் சோபிப்பதில்லை; பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவதில்லை. கல்வியிலே கருத்துடைய சாதியாரோ போர்ச்சேவகஞ் செய்ய விரும்புவதில்லை. இந்தியச் சேனையிலே மூன்றில் ஒருபங்கு முஸ்லீம்கள்; மற்றவர் ஹிந்துக்களும் சிக்கியரும். சேனைக்கு வேண்டிய ஆட்கள் போர்த்தொழிற் சாதிகளிலிருந்தே பெரும்பாலும் பொறுக்கியெடுக்கப் படுகிறார்கள். இதனால் போர்த்தொழிற் சாதி, போர்த்திறமையற்ற சாதி என்ற வித்தியாசத்தை அதிகப் படுத்தி விட்டார்கள் என்று பிரிட்டிஷாரின் மீது குறை கூறப்படுவது உண்மையே. ஆனால் சிக்கனத்தைக் கருதியே போர் செய்யத் தகுதியுடையவர்களையே பொறுக்கியெடுக்கவேண்டியதாயிற்று. சென்ற யுத்தத்திலே மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டபோது, எல்லாச் சாதிகளினின்றுமே சேனைக்கு ஆள் சேர்த்தார்கள்; அப்பொழுதும் சேனையிலே சேர்ந்த ஆட்களில் முக்கால் வாசிப் பேர் பஞ்சாபிலிருந்தும் ஐக்கிய மாகாணத்திலிருந்துமே வந்தனர்.

ஆனாலும் இவ்வாறு இந்தியமக்களைப் போர்த்தொழிற் சாதி, போர்த்திறமை யில்லாச்சாதி என்று பிரிப்பதால், இருவகை அபாயம் நேரிடக்கூடும் என்பதை சரித்திர வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். போர்ப்பழக்கம் உள்ள சாதி ஒவ்வொன்றும் இந்தியா முழுவதையும் கட்டியாள வேண்டும் என்ற நோக்கத்துடன் மற்ற சாதிகளோடு சண்டை செய்யத் தொடங்கலாம். இப்பொழுது இந்திய சம்ஸ்தானங்களாக இருப்பவை முன்காலத்தில் அப்படிப் போர் புரிந்ததுண்டு. இவை போர்த்திறமை யில்லாத சாதிகளை இம்சிக்கக்கூடும் என்பதே மற்றோர் அபாயம் ஆகும்.

மூன்று தலைமுறைகளாக பிரிட்டிஷார் அரசுபுரிந்த பிறகும், இந்த அபாயங்கள் ஒழிந்தபாடில்லை. என்றேனும் நேரலாம்; ஆதலால் தற்கால நிலைமையிலே பிரிட்டிஷ் படைவீரன் இந்தியாவிற்கு இன்றியமையாதவன் ஆகிறான்.

மதச் சச்சரவுகள்

பிரிட்டிஷ் படையின் உதவி இந்தியாவிற்கு அவசியம் என்பதற்கு வேறொரு காரணமும் உண்டு. மத சம்பந்தமான சச்சரவுகள் அடிக்கடி உண்டாவதுதான் அந்தக் காரணம். ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே கலகம் தோன்றுவது இயற்கையென்றாலும் இவ்விதக் கலகம் அபாயகரமானதே; ஹிந்து மதத்தினருக்குள்ளேயே மதப் பிரிவுகளால் சச்சரவு ஏற்படுவதும் உண்டு; இதுபோலவே, முஸ்லீம்களுக்குள் சச்சரவு உண்டாகி, கலகமாக முற்றுவதும் உண்டு. சாதாரண சமயங்களிலே, கிராமங்களிலும் சிறு பட்டணங்களிலும் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் அக்கம் பக்கத்தினராக அமைதியுடன் வாழ்வார்கள். இரு திறத்தாரின் வாழ்க்கை முறைகள் முற்றிலும் விரோதமானவையாதலால், இரு மதத்தினரும் பிரிந்து தனித் தனித் தெருக்களிலே வசிப்பார்கள்; இருந்தாலும், ஒருவர்க்கொருவர் அனுகூலமாக இருப்பார்கள். மேலும், இரு திறத்தாரின் தலைவர்களும் பிரிட்டிஷ் அரசாட்சியைத் தாக்குவதற்கு ஒன்று சேர்வதால், சாதி மதச் சச்சரவுகளைப்பற்றிச் சொல்வதெல்லாம் அதிசயோக்தி என்றே இந்தியாவின் இயற்கையை அறியாதவன் நினைக்கக் கூடும்.

ஆனால், திடீரென்று ஒரு வகுப்பாருக்கு மதப்பித்து பிடித்துவிடும். அக்கம் பக்கத்தில் வாழ்பவர்கள் கலந்து பழக வசதியில்லாத நகரங்களிலேதான் இச்சச்சரவுகள் எளிதில் ஏற்படும். மதப் பைத்தியம் முற்றுவதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. செல்வ நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளால் அடிக்கடிச் சச்சரவுகள் ஏற்படலாம் அன்றோ? அவை எளிதில் மதச் சண்டைகளாக மாறுகின்றன. இந்திய விவசாயியால் கடன் வாங்காது இருக்கமுடியாது. கடன்

கொடுத்தவன் ஹிந்துவாக இருப்பான்; கடன் வாங்கினவர்கள் முஸ்லீம்களாக இருப்பார்கள். சில இடங்களில் இதற்கு நேர்மாருக இருக்கலாம். எப்படியிருந்தாலும், கடன் கொடுத்தவன் மேலுள்ள பகை அவனுடைய மதத்தின்மேற் பாய்கிறது. தவிர, இருமதத்தினரும் அரசாங்கப் பதவிகளைப் பெறுவதில் போட்டி போடுவதாலும் பகையுணர்ச்சி உண்டாகின்றது. இத்தகைய காரணங்களால் இரு திறத்தார்க்கும் மனக்கொதிப்பு உண்டாகின்றது; அடுத்த நிமிஷம் கலகம்; இதுதான் சமயம் என்று போக்கிரிகள் கிளம்புகிருர்கள். உடனே போலீஸார் தலையிட்டுக் கலகத்தை அடக்குகிருர்கள். அனேக தடவைகளில் இராணுவப் படையின் உதவியும் வேண்டியதாகும்; இதைப் பொது மக்கள் நன்கறிவார்கள்; இராணுவப்படை வருவதை அவர்கள் எதிர்பார்க்கிருர்கள். இவ்வேளைகளிலே தான் பிரிட்டிஷ் படைவீரனது சேவகம் அவசியமாகிறது. இவன் ஹிந்துவும் அல்லன், முகம்மதியனும் அல்லன்; ஆதலால் சிறிதும் பட்சபாதமின்றி நடந்து கொள்வான்; மேலும், கோபமூட்டினுலும் படபடப்பின்றியும் சாந்த நிலை மாருதும் இருப்பான்.

எப்பொழுதும் பகை மூளக்கூடிய நிலைமையில் பல மதத்தினரும் சாதியினரும் வாழும் இந்நாட்டிலே அமைதி நிலை மாருதிருக்கச் செய்வதும், வெளி நாடுகளிலிருந்து படையெழுச்சி வாராதபடி தடுப்பதைப்போலவே, மிகச் சிரமமான வேலையாகும். பிளவுபடுத்திப் பிரித்து ஆளும் முறையைக் கையாண்டு சாதி மதச் சச்சரவுகளை வளரச்செய்கிருர்கள் என்று பிரிட்டிஷார்மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. இப்படிப்பட்ட சச்சரவுகளால் பிரிட்டிஷாருக்கு நேரும் கஷ்டநஷ்டங்களை நேரிற் கண்டவன் எவனும் இவ்விதம் குற்றஞ் சாட்டமாட்டான். பிரிட்டிஷ்காரன் ஒவ்வொருவனுக்கும்—அவன் இராணுவத்தைச் சேர்ந்தவனுயினும் சரி, அல்லது 'சிவில்' உத்தியோகஸ்தன் ஆயினும் சரி—கலகம் என்ருல் பயமே. கலகம் எப்படி முடிந்தாலும் கஷ்டம்; தோற்ற கட்சி இவனைத் தாக்கும்; மேலதிகாரிகளும் இவனையே கண்டிப்பார்கள். உண்மை இப்படியிருக்க, பிரிட்டிஷார் மதச் சச்சரவுகளைக் கிளப்பி விடுகிருர்கள் என்று, ஒன்று அறியா

மையால் சொல்லவேண்டும், அல்லது, அடாப்பழி சுமத்த வேண்டுமென்ற நோக்கங்கொண்டு சொல்லவேண்டும்.

இந்தச் சச்சரவுகள் சமீப காலத்தில் அதிகமாகிவிட்டன என்பது உண்மையே. இது ஏன்? ஜன நாயக ஆட்சி முறையால், அரசியல் கிளர்ச்சிகள் அதிகரித்தன; ஹிந்துக்களோ, முஸ்லீம்களோ, தங்கள் தங்கள் மதப் பெருமைகளைப் பாராட்டும் சந்தர்ப்பங்களை நழுவ விடுவதில்லை; பகையுணர்ச்சி மேலிடுகிறது. தவிர, இரு கட்சித் தலைவர்களும் தங்கள் தங்கள் மதத்தினரின் உதவியை நாடி அவர்களை உற்சாகப் படுத்திவிடுகிறார்கள். ஹிந்து மகாசபை, முஸ்லீம் கிலாபத் கமிட்டி முதலிய ஸ்தாபனங்கள் தோன்றி ஒன்றையொன்று எதிர்த்துப் பிரசாரஞ் செய்கின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பினரை மீண்டும் ஹிந்து மதத்திலே சேர்த்துக் கொள்வதற்கு ஹிந்து மகாசபை முயல்கின்றது. கிலாபத் கமிட்டியாரோ இவர்களையெல்லாம் 'இஸ்லாம்' மதத்திலே சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். இப்படி இரு திறத்தாரும் தங்கள் ஸ்தாபனங்களைப் பலப்படுத்த முயல்கிறார்கள். இம்முயற்சியால் பெறக்கூடிய இலாபமோ, பதவி, அதிகாரம், செல்வாக்கு ஆகிய மூன்றும்; ஆகையால், மதப் பிரிவுகளும் சச்சரவுகளும் அதிகமாகி, இரு திறத்தாருக்கும் உள்ளக் கொதிப்பை உண்டாக்குகின்றன. சிறு சம்பவமும் பெரிய கலகத்திலே கொண்டுபோய் விடுகிறது. இந்நிலைமையே—புதிய அரசியல் திட்டம் பிறக்குங் காலத்தில் உண்டாகும் இப்பிரசவ வேதனையே—சாதி மதச் சச்சரவுகள் அதிகரித்ததற்குக் காரணம் ஆகும்.

சேனையை இந்திய மயமாக்குதல்

நாம் இதுவரை ஆராய்ந்த விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. எல்லைப்புறத்தைக் காப்பதும் உள் நாட்டுச் சச்சரவுகளைத் தீர்ப்பதும் மிகக் கடினமான வேலை என்றே இந்தியத் தலைவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்; ஆனால், இவ் வேலையிலுள்ள கஷ்டங்களை அதிகப்படுத்திக் கூறுகிறார்கள் என்று பிரிட்டிஷார்மீது குற்றம் சாட்டப்படுகிறது. 'அரசியல் துறையிலே இந்தியர் முன்னேற்றம்பெற விரும்புவதே

அபாயகரமானது' என்ற அபிப்பிராயமுள்ள சிலர், இச் சச்சரவுகளைக் காரணமாகக்கொண்டு, 'இந்தியாவிலே பிரிட்டிஷ் அதிகாரமே என்றும் நிலைத்திருக்கவேண்டும்' என்று பல ஆண்டுகளாக வாதித்து வந்தார்கள். இதைக்கேட்டு இந்தியர் பொறுமை யிழந்தவராய், தமது நாட்டினுள்ளும் எல்லையிலும் அமைதி நிலை கெடாதிருக்கவேண்டும் என்பதை மறந்துவிடுகிறார்கள். மேலும், 'பாதுகாப்பு வேலையை பிரிட்டிஷார் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டு, தற்காப்புக்குரிய இராணுவ பலம் இந்தியாவிற்கு இல்லாததால் அது சுய ஆட்சிபெறத் தகுதியற்றது என்கிறார்கள்' என்று பிரிட்டிஷாரைப் பழிக்கிறார்கள்; பாதுகாப்புச் சேனையை இந்திய மயம் ஆக்கவேண்டுமென்றும் பிரசாரம் செய்கிறார்கள்; இந்தியப் படையிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளை நீக்கி அப்பதவிகளை இந்தியர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும், இந்திய அதிகாரிகளைக் கொண்ட பீரங்கிப் படைகளையும் விமானப் படைகளையும் வகுக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். இதுவே சேனையை இந்திய மயம் ஆக்கவேண்டும் என்பதின் பொருள்.

சுய ஆட்சி பெற்ற இந்தியாவானது எல்லைப்புறத்திலும் உள்நாட்டிலும் அமைதி குடிகொள்ளுமாறு செய்யும் பொறுப்பைத் தானே மேற்கொள்ளவேண்டும் என்பது தெளிவு. ஆனல் அத்தகைய நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் வெகு தூரம்; தேசியப் படையிலே இந்தியாவின் பல பாகங்களினின்றும் படையாட்கள் சேரவேண்டும்; அவர்களில் ஒவ்வொருவனும் மற்றவர்களை நண்பர்களாகக் கருதவேண்டும்; அவர்கள் அனைவரும் பொது மக்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்ளவேண்டும். இத்தகைய படையைத் தயாரிப்பதே இந்தியர்களின் நோக்கம்; பிரிட்டிஷாரின் நோக்கமும் இதுவே; இந்நோக்கத்துடனே படையைத் தயாரிக்கவும் தொடங்கியுள்ளார்கள்; ஆயினும், பிரிட்டிஷார் இதற்கு முன்பே இக்காரியத்தைத் தொடங்கவில்லை என்பது வருந்தத்தக்க விஷயமே. 1935-வது வருஷச் சட்டத்திலே ஒரு புதிய ஏற்பாடு உள்ளது: மாகாணங்களை அமைதியுறக் காக்கும் பொறுப்பும் அதிகாரமும் பொதுமக்க

ளாலே தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் நம்பிக்கைக்குரிய மாகாண மந்திரி சபையாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்தியப்படை பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பினும் (கவர்னர் ஜெனரல் இவ்விஷயத்திலே சமஷ்டி மந்திரி சபையோடு ஒத்துப்போவாராதலால்) உள்நாட்டு அமைதி நிலையைப் பாதுகாக்கும் போலீஸ் வேலையானது பொதுஜன சம்மதம்பெற்ற மாகாண சர்க்காருக்கே உரியதாகும்.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் படைவீரனுடைய வேலை என்னவென்றால், வெளிநாட்டுப் படையெடுப்புகளைத் தடுப்பதும் உள்நாட்டுக் கலகங்களை ஒடுக்குவதுமே. இவ்வாறு அமைந்த பாதுகாப்பின் ஆதரவிலே, தேசிய ராணுவப்படை தயாராகின்றது. பிரிட்டிஷார் இந்திய மக்களுக்கு உதவிய நன்மைகளுள் முக்கியமானது எது என்றால், வெளிநாட்டுப் படையெழுச்சிகளையும் உள்நாட்டுக் கலகங்களையும் நேரவொட்டாது தடுத்ததே என்னலாம். இந்த சௌகரியம் பெற்றதாலேதான் இந்திய மக்களிடையே தேசீய உணர்ச்சி எழுந்து வளர்ந்து பரவலாயிற்று; இவ்வளர்ச்சியும் பிரிட்டிஷாரால் ஏற்பட்ட நன்மையே.

மேனாட்டுக் கல்வியின் பயன்

பிரிட்டிஷார் முக்கிய அதிகாரம் பெறுவதற்குமுன், இந்தியாவிலே அராஜகமும் துன்பமும் பரவியிருந்தன; அதனாலேயே, முற்காலத்து அரசுகளைவிட, பிரிட்டிஷ் அதிகாரம் பெரிதும் பாராட்டப்பட்டது. பிரிட்டிஷ் அதிகாரம் தொடங்கி ஒன்றேகால் நூற்றாண்டுதானே ஆயிற்று; பலவகைப்பட்டனவாய் நீண்டகாலம் இந்நாட்டிலே வேரூன்றி நிலைத்த நாகரிகங்களையும் பிரிவினைகளையும் தங்கள் கொள்கைகளுக்கிணங்க மாற்றவும் ஒற்றுமைப்படுத்தவும் இவ்வளவு குறுகிய காலம் போதாதாயிற்று. ஆயினும் இக்கொள்கைகள் நாட்டு மக்களின் கொள்கைகளோடு உறுய்ந்து அவற்றை ஊக்கி வந்தன; இந்திய தேசீய இயக்கமானது பிரிட்டிஷ் அதிகார நிழலிலே ஒதுங்கி வளர்வதற்கும் உதவின.

இக்கொள்கைகளிலே அதிகச் சக்தி வாய்ந்தது மேனாட்டுக் கல்வியே. ஆங்கிலத்தின்மூலம் கல்வி கற்பிக்கவேண்டும் என்று தீர்மானித்ததற்குக் காரணம், இந்தியர்களுக்கு அது அதிக நன்மை பயப்பதாகும் என்னும் அபிப்பிராயமே. சர்க்கார் தஸ்தாவேசுகளைப் பரிசிலனை செய்வோர்க்கு இது உண்மை என்பது நன்கு புலப்படும். 'மெகாலே' உள்ளிட்ட பல பிரமுகர்கள், 'மேனாட்டு மனோபாவங்களில் இந்தியர் பழகுவதால் ஜன சமூக ஆட்சிக்குரிய ஆலோசனைச் சபைகளை நிறுவவேண்டும் என்று கேட்பார்கள்' என்றே எதிர்பார்த்தனர்; அவ்வாறு வற்புறுத்திக் கேட்குங் காலம் வரவேண்டும் என்பதே அவர்களுடைய கருத்து.

கல்வித் திட்டத்தின் உட் கருத்து என்ன? கற்றறிய வல்ல சாதியினர் ஆங்கிலக்கல்வி பயின்றபின், அவர்கள் பெற்ற மேனாட்டுக் கல்வியின் நன்மையெல்லாம் மெல்ல மெல்ல பொது மக்களின் வாழ்க்கையிலே பொசியுமாதலால், நாளடைவில் அனைவரும் மேனாட்டு மனோபாவங்களையுடையவர்களாய் கிறுஸ்தவர்களாகி விடுவார்கள் என்பதே. இக் கருத்துடையவர்கள் இந்தியாவின் நிலைமையிற் காணப்படும் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவில்லை. முதலாவது, பரம்பரையாகக் கல்வி பயின்றுவரும் சாதியினரைப் பொது மக்களோடு கலந்து கொள்ளாதபடி, இடைச்சுவர் எழுப்பினாற்போல, சாதிக் கட்டுப்பாடு பிரித்து வைக்கின்றது என்பது. அரசியல் முறையிலே ஏற்பட்ட மாறுதல்களின் பயனாக, ராஜ்ய விஷயங்களிலே பொதுமக்களும் பங்கு பெறவேண்டும் என்பதைக் கல்வி யறிவுபடைத்த சாதியினர் கண்டுகொள்ளுமுன், தாங்கள் கல்வியாற் பெற்ற நலனை அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கவில்லை. இரண்டாவதாக, கல்விப்பழக்கமுள்ள சாதியார், முற்காலங்களிலே பாரசிகம் முதலிய பாஷைகளைக் கற்றதுபோலவே, ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டார்கள். யார் அரசு செலுத்துகிறார்களோ அவர்களது பாஷையைக் கற்றால் மட்டுமே அரசாங்கப் பதவிகளைப் பெறலாம். ஆயினும், பிறபாஷைகளைக் கற்றுக் கொண்டதால் இவர்களது இந்தியத் தன்மை மாறிவிடவில்லை; தங்களை ஆளும் அன்னியரிடம் சினேகமும் அதிகப்

படவில்லை. வேலைக்கு லாயக்காகச் செய்யும் மேனாட்டுக் கல்வி ஒரு புறம் இருக்க, பரம்பரையாக வந்த வாழ்க்கை முறைகளும் மனோபாவங்களும் மாறுபடாமலும் பலங் குன்றாமலும் இருந்துவந்தன. எனவே, தங்களை ஆளுவோருக்கு ஆள உரிமை இல்லை என்று வாதாடுவதற்கு மட்டுமே இக்கல்வி பயன்பட்டது. உத்தியோகம் பார்க்கும் வேளைகளில் மேனாட்டு நாகரிக மனோபாவங்களும், மற்ற வேளைகளில் இந்த மனோபாவங்களுக்கு முற்றிலும் மாறுபட்டனவாய் தலைமுறை தலைமுறையாகக் கொண்ட மனோபாவங்களும், ஒருவனிடத்திலேயே விசித்திரமாக அமைந்திருந்தன. ஆங்கிலம் கற்ற இந்தியர்க்கே நியமனங்களில் சர்க்கார் சலுகைகாட்டி வந்ததால், இந்த விசித்திரமான சேராச்சேர்த்தி இன்னும் அதிகமாகக் காணப்பட்டது. பெண்மக்களை வீட்டிற்குப் புறம்பான விஷயங்கள் ஒன்றிலும் சேரவிடாது தடுக்கும் பழைய வழக்கமானது (ஹிந்துக்களானாலும் சரி, முஸ்லீம்களானாலும் சரி) கல்விகற்றவர்களிடமும் வேரூன்றியிருந்தது; இதுவும் இந்த அதிசயமான சேராச்சேர்த்திக்கு ஒரு அனுகூலமாயிற்று.

மேனாட்டுக்கல்வி பெறுவதற்கான சௌகரியங்கள் வர வர அதிகரிக்கவே, கல்விப்பழக்கமுள்ள சாதியினர் மட்டுமே அவற்றால் பயனடைந்தார்கள். வெகுகாலமாக, தேச பாஷைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன; இந்தியாவிலுள்ள கிராமங்களிலே காணப்பட்ட பழைய பள்ளிக்கூடங்கள் அழிந்துபோயின. அவை பெரும்பாலும் மத சம்பந்தம் பெற்றிருந்தன; கோயிற் பார்ப்பானோ மசூதியைச்சார்ந்த 'முல்லா'வோ பாடம் சொல்லிக்கொடுப்பார். படிப்பதற்குப் புஸ்தகம் இராது. ஆயினும் இந்தப் பள்ளிக்கூடங்களும் வேண்டியிருந்தன. எத்தனைக் கல்வியாளர் இவ்வகைப் பள்ளிக்கூடங்களிலே கல்வி கற்கத் தொடங்கியவர்கள்! இவற்றைச் சீர்திருத்தி ஆதரியாததாலும், பெரு மதிப்புப்பெற்ற மேனாட்டுக் கல்விக்கும் இவற்றிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமற் போனதாலும், கல்வி பயிலுஞ் சாதியாரால் புறக்கணிக்கப்பட்டு நாளடைவில் இவை நாசமடைந்தன. இந்தியக்கல்வியும் தலைப்பாகம் பெருத்தும் அடிப்பாகம் சிறுத்தும்

கோரமாகத் தோன்றும் வடிவு கொள்வதாயிற்று. தேச முழுவதையும் கணக்கிட்டுப் பார்த்தால், எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 1000-க்கு 95 பேர்; ஆனால் கல்வி பயிலுஞ் சாதியாரை மட்டும் கணக்கிட்டால், அவர்களில் மிகப் பெரும் பகுதியினர் பள்ளிக்கூடங்களிலும் சர்வ கலாசாலைகளிலும் கல்வி பயில்வோராகக் காணப்படுகிறார்கள். இப்படி ஒரு பகுதியினர் அதிகமாகவும் மற்றைப் பகுதியினர் குறைவாகவும் கல்வி பயில்வதால் விளையக்கூடிய கெடுதிகள் நீண்ட காலம் தோன்றாது இருக்குமா? ஆரம்பக் கல்வி முதல் சர்வ கலாசாலைப் படிப்பு முடிய, ஒரு முழுத்திட்டமாக அமைக்கப்பட்டது; தேச பாஷைகளின் மூலமாகவே கல்வி பயில வேண்டும் என்றும், ஸ்திரீகளுக்கும் கல்வியளிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது; ஆயினும் இம்முயற்சிகள் விரும்பிய அளவு பயனை அளிக்கவில்லை; விஷயமோ மிகப் பெரிது; செவ்வையாகச் செய்துமுடிப்பதற்குப் போதுமான பணம் கிடையாது; உள்ள பணத்தையும் 'எங்களுக்கு வேண்டும்' என்று கூக்குரலிடும் சாதியாருக்கு ஒதுக்கி விடுவது சுலபமாகவும், கல்வியை விரும்பாத சாதிகளைக் கட்டாயப் படுத்திக் கல்வி பயிலச்செய்வது சிரமமாகவும் தோன்றிற்று. மேலும் பாமர சாதிகள் தலைமுறை தலைமுறையாய், கேள்வி மூலமாக இயற்கை யறிவு புகட்டப்பெற்று வருவதால், புஸ்தகப்படிப்பு அவர்களுக்குத் தேவையில்லை எனப்பட்டது; கொஞ்ச காலமாகத் தான், (விசேஷமாக, கல்வி இலாகா மாகாண மந்திரிகளின் வசமான பிறகே), கட்டாயப்படுத்தியேனும் நகரங்களிலும் நாட்டுப் புறத்திலும் ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதற்காக பெரு முயற்சிகள் செய்துவருகிறார்கள். ஆனால் பொதுசனங்களுக்கு ஊக்கம் இல்லாததாலும் பணத் தட்டினாலும் இம்முயற்சிகள் ஓங்கவில்லை.

சாதிக் கோட்பாட்டிற்கு அதிசயிக்கத்தக்க சக்தியும் சிவனும் உண்டு; கல்விப் பழக்கமுள்ள சாதிகளுக்கும் மற்றைச் சாதிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அதிகப் படுத்துவதற்கு மேனாட்டுக் கல்வியையே ஒரு கருவியாக்கிக் கொண்டதினின்றுமே இதனை அறியலாம். மேனாட்டு வழிகளிலே சென்று இந்தியா முன்னேற்றம் அடையும் என்று

நினைத்தே பிரிட்டிஷார் இந்தியாவிற்கு மேனாட்டுக் கல்வியை அளித்தார்கள்; ஆனால் அவர்கள் கோரிய பயனை இந்தியா அடையவில்லை; இனியும் அடையாது என்றே தோன்று கிறது. அதற்கு மாறாக, மேனாட்டுக் கல்வியானது இந்தியா விலே அறிவாளிகளின் சமூகம் ஒன்றை உண்டாக்கியது; இவர்கள் குறிப்பிட்ட சில இடங்களிலே மட்டும் வசிப்பவர் அல்லர், நாடெங்கும் பரவியுள்ளார்கள். இவர்களுக்குப் பொதுவாகச் சில இலட்சியங்கள் இருக்கின்றன; அவற்றின் உட்கருத்து, இந்தியா ஆங்கிலமயம் ஆவதைத் தடுத்து, அதை இந்தியமய மாக்கவேண்டும் என்பதே.

பண்டை வழக்கங்களைப் போற்றுவோரும் இந்திய தேசீய இயக்கமும்

இந்தியாவின் புராதன நாகரிகத்தையும் ஸ்தாபனங்களை யும் மேனாட்டார் தாக்கிக் கெடுத்துவிடாதபடி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையே இந்திய தேசீய இயக்கத்திலே மிக்க வலிமைவாய்ந்துள்ளது; கீழ்த்திசை நாடுகள் விழித் துக்கொண்டதின் பயன் இது. ஐரோப்பாவிற்கு இருந்த பௌதிக சாஸ்திரப் பயிற்சிக்கு முன், ஆசியா நிற்க முடி யாமல் இருந்தது. ஆனால் வெகு காலமாக இரண்டு நாகரிகங் களுக்கும் இடையறாத தொடர்பு இருந்ததால், மேனாடு களின்மீது ஒரு அருவருப்பும் எதிர்ப்புச் சக்தியும் கீழ்நாடு களிலே தோன்றின. கீழ்நாட்டு நாகரிகங்கள் மேனாட்டு நாகரிகத்தினும் தாழ்ந்தன அல்ல என்று இவர்கள் பெருமை கொள்ளத் தொடங்கினார்கள். ருஷியாவை ஜப்பான் செயித் ததும் இந்த இயக்கத்திற்கு அனுகூலமாயிற்று. ஜப்பானின் வெற்றியொலி கீழ்த்திசை நாடுகளில் எங்கும் பரந்தது. இந் நாடுகளிலே வாழும் சனங்களுக்கு, புதிய தைரியமும் நம்பிக் கையும் உண்டாயின. இந்த எதிர்ப்பின் வேகமும் பலமும் இந்தியாவிலும் காணப்பட்டன. பண்டைக்காலத்திலே இந் தியா அடைந்திருந்த மேன்மைகளை அறிந்து, எதிர்காலத் திலும் இந்நாடு அம்மேன்மைகளை மீண்டும் அடைவதையே இந்திய மக்கள் எதிர்பார்ப்பார் ஆயினர்; முன்னாளிலே

கல்வியாளர் மேனாட்டு வழக்கங்களைச் சற்றும் பரிசிலனை செய்யாமலே ஏற்றுக்கொண்டதை இந்நாளிலே பரிகசிப்பார் ஆயினர்; இந்தியாவைச் சேர்ந்தவற்றைப் புகழ்ந்தும் பிரிட்டனைச் சேர்ந்தவற்றை இகழ்ந்தும் பேசுவார் ஆயினர்.

'மேனாடுகள் இலௌகிக விஷயங்களிலே ஈடுபடுவன; கீழ் நாடுகளோ பரமார்த்த விஷயங்களிலே ஈடுபடுவன' என்றெல்லாம் பறையடிக்கப்பட்டது. அழிந்துபோகும் நிலைமையிலிருக்கும் இந்திய நாகரிகமாகிய பொக்கிஷத்தை அழியாதபடி பாதுகாத்தல் இந்திய மக்கள் அனைவருக்கும் கடமையாகும். மேற்கத்திய லோகாயத மதத்தோடு போர்புரிந்து வெற்றி பெறவேண்டும். இலௌகிக ஆயுதங்களைக்கொண்டு இப்போரை நடத்தாமல், கிழக்கத்திய ஆயுதமான ஆத்ம சக்தியைக்கொண்டே போர் புரியவேண்டும். அப்போது தான், இந்தியாவின் ஜீவன் அழியாமல் நிலைத்திருக்கும். அப்போதுதான், இந்தியாவானது தன் பெருமைக்கு ஏற்றவாறு உலக நன்மைக்கு உதவிபுரிந்து, உலகத்து இராச்சியங்களுக்கு இடையிலே, வெற்றிபெற்ற ஆத்ம சக்தியே உருவெடுத்தாற்போன்று செருக்கித் தலை நிமிர்ந்து நிற்கும்.

இந்தியாவிற்கு பிரிட்டன் செய்த நன்மைகள்

இவ்வாறான கொள்கைகளால் இந்திய தேசிய இயக்கத்திற்கு ஏற்பட்ட பலத்தை, பிரிட்டனில் இருக்கும் நாம் நன்றாகத் தெரிந்துகொள்வதில்லை. நாம் இலௌகிகப்பற்று மிகுந்தவர்கள் என்று நாம் நினைப்பதில்லை; இந்தியரைக் காட்டிலும் நாமே தரும காரியங்களை ஒழுங்காக நடத்துகிறோம் என்றே நினைக்கிறோம்; பணக்காரனும் சக்திமானும் ஏழை யெளியவர்களுக்குக் கடமைப்பட்டவர்கள் என்பதை நற்செயல்களால் காட்டுகிறோம்; மேனாட்டு நாகரிகத்தால் இந்தியாவில் விளைந்த நன்மைகளைக் கண்டு கர்வங்கொள்கிறோம்; நாட்டின் விஸ்தீர்ணத்தாலும், மக்களிடையேயுள்ள பலவகைப் பிரிவுகளாலும், ஜனங்களிற் பெரும்பாலார் ஏழைகளாயிருப்பதாலும் மேனாட்டு நாகரிகமானது முழுப்பயனை அளிக்கவில்லையே என்று வருந்துகிறோம்; சச்சரவுகள் நேராமல் நாடு அபி

விருத்தி அடைவதற்குத் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் வாழ்நாட்களை அர்ப்பணஞ்செய்த ஆங்கிலேயர்களை நினைத்து இறுமாப்படைகிறோம்; 42,000 மைல் இருப்புப்பாதை போட்டு இந்தியா முழுவதையும் ஒரே செல்வ நிலையையுடையதாகச்செய்து, எங்கே பயிர்ச்சேதம் நேரிட்டாலும் அங்கே அப்பொழுதே சென்று பீடிக்கும் பஞ்சம் என்னும் பேயை நாடவொட்டாமல் விரட்டி வருகிறோம்; உண்மையிலே, இருப்புப்பாதை இந்நாட்டிற்கே அமைந்த அருஞ்செல்வம் ஆகும்; 65 கோடி பவுன் இவற்றிற்கு மூலதனம்; இதிலே முக்காலே யரைக்கால் பங்கு அரசாங்கத்தாருடையது. 'ரயில்' மார்க்கமாக அமைந்த நீளத்தில் முக்கால் பங்கு அரசாங்கத்தாரைச் சேர்ந்தது. கால்வாய் வெட்டும் பிரிட்டிஷ் 'இஞ்சினீர்'கள் வருமுன், பொட்டலாய்க் கிடந்த 330 லக்ஷம் 'ஏக்கர்' விஸ்தீர்ணமுள்ள நிலங்கள் இன்று நல்ல நஞ்சை நிலங்களாகவும் கொழுத்த நகரங்களாகவும் மாறிவிட்டன; உலகம் அதிசயிக்கும் வகையிலே, 75,000 மைல் நீளமுள்ள வாய்க்கால்களாலும் ஏரி குளம் முதலிய வசதிகளாலும் வருஷந்தோறும் சாகுபடியாகும் பயிர்களின் கிரயத்தொகை மட்டுமே, வாய்க்கால் முதலிய வசதிகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகையினும் அதிகமாக இருக்கிறது; மேலும், அறியாமையோடும் நோய்களோடும் இடைவிடாமல் போர் நடத்தியும், ஹிந்து மதத்தினின்று ஒதுக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும் அயர்ந்து கிடக்கும் சாதிகளைத் தட்டி எழுப்பியும், தலைமுறை தலைமுறையாக அடைத்துக்கிடந்த பெண்மக்களை விடுவித்தும், மேனாட்டு நாகரிகத்தினின்று ஊக்கமும் உற்சாகமும்பெற்ற சமூக சீர்திருத்தச் சங்கங்களைப் போஷித்தும் நாம் செய்துவரும் நன்மைகளையெல்லாம் நினைப்பூட்டிக் கொள்கிறோம்.

மகாத்மா காந்தியும் பிறருதவி வேண்டாமையும்

மேலே விளக்கிய படத்திற்குப் பின்புறம் ஒன்று உண்டு என்பதையும் அதையே இந்தியர் முன்புறமாகக் கருதுகிறார்கள் என்பதையும் நாம் மறப்பது இயல்பு. பண்டைக்காலத்துப் பழக்க வழக்கங்களைப் போற்றும் மனப்பான்மையே

மகாத்மா காந்திக்கு அருஞ்செயல்களைச்செய்து முடிப்பதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்கின்றது; கோடிக்கணக்கான இந்தியரின் மனதைக் கவர்வதற்குக் காரணமாவதும் இதுவே. 'இந்தியன் நாஷனல் காங்கிரஸ்' சபையோடு ஒன்றாகி விட்ட இந்தியதேசிய இயக்கமும், மகாத்மா காந்தியைப் போலவே, பிரிட்டிஷாருக்கு பிரதிகூலமானது அன்று; இந்தியருக்கு அனுகூலத்தை நாடுவதே யாகும். மேனாட்டுக் கல்வி, மேனாட்டு நாகரிகம் என்னும் விலங்குகளைத் தெறித்து இந்தியமக்களை விடுதலை செய்யவேண்டும் என்று முயல்வது; ஏழைகள் இன்னும் அதிக ஏழைகளாயும், அறிவாளிகள் வேலையின்றியும் இருக்க, பெருஞ்செலவிலே சேனைசேர்த்தும் அதிகச்சம்பளத்தில் உத்தியோகஸ்தர்களை நியமித்தும் பிரிட்டனிடமிருந்து வாங்கிய கடனுக்கு வட்டிசெலுத்தியும் இந்தியாவின் அற்ப வருமானத்தையும் வாரியிறைக்கும் முறைகளினின்றும் இந்தியர்களை விடுதலை செய்ய விரும்புகிறது.

இவ் விடுதலைபெற, தேசிய இயக்கமானது பகிஷ்காரம், சாத்துவிக எதிர்ப்பு, ஒத்துழையாமை என்னும் ஆயுதங்களை உபயோகிக்கிறது. இவை மூன்றும், பிரிட்டிஷார் அபிப்பிராயத்திலே, நெருக்கடியான நிலைமைகளை உண்டு பண்ணுவன; இவை பிரிட்டிஷ் அரசாட்சிக்கு விரோதமாக உள்ளவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்து, ராஜீயத்துறையிலே வெற்றிதரக்கூடிய ஆயுதங்களாக அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆனால் அரசியலைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பது அன்று இந்த இயக்கத்தின் நோக்கம்; வேறு எதுதான் நோக்கம் என்றால், இந்தியர் பிறரிடம் யாதொரு உதவியையும் வேண்டாதபடி நாட்டின் செல்வ நிலையைத் திருத்தி அமைக்கவேண்டும் என்பதும், இக்கால யந்திரங்களை ஒழித்துவிட்டு நீண்டகாலமாகக் கைத்தொழில்களிலே உபயோகித்துவரும் கருவிகளை உபயோகிப்பதும், இறக்குமதியாகும் துணிகளை வாங்காமல் உள்நாட்டிலே கையால் நூற்று கைத்தறியிலே நெய்த ஆடைகளையே வாங்குவதால் ஏழைமக்கள் சீவனஞ்செய்ய உதவுவதும், மயக்கத்தைக்கொடுக்கும் அபின், சாராயம் முதலியவற்றை உட்கொள்வதைத் தடுத்து இக்கொடிய பழக்கங்களால் ஏற்படும்

சமூகக்கேடுகளை நீக்குவதுமே இவர்களது நோக்கம். இந் நோக்கத்தோடு செய்யப்படும் வேலைகளோ அரசியல் விஷயங் களிலே தலையிடுவதுபோலத் தோன்றுவன. ஏனெனில், இவை வரிவருமானத்தைக் குறைத்து அரசாங்க யந்திரம் ஓடு வதைத் தடுக்கின்றன; நியாயம் அநியாயம் என்ற உணர்ச்சி யின்றி காரியத்தைச் செய்து முடிப்பதே முக்கியமெனக் கொண்டு சர்க்கார் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்று மகாத்மா காந்தியும் அவரைப் பின்பற்றுவோரும் குற்றங் கூறி, சர்க்காரைப் போருக்கு அழைக்கிறார்கள். ஆயினும், இந்திய தேசிய இயக்கத்திலுள்ள இந்த அம்சங்கள் அரசியலை யொட்டி எழுந்தன அல்ல; இவை இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியால் எழுந்தவையே. இதனாலேதான், இவை சட்ட திட்டங்களாற் கட்டப்படாமல் இருக்கின்றன. தன் வாழ்க் கைத் திட்டத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை இந்தியா பெற்றபின்பு, வேண்டியவிதமாக அரசியல் ஸ்தாபனங்களை அமைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணமே இவர்களை பூர்ண சுதந்திரமே வேண்டும் என்று வற்புறுத்தச் செய்கிறது.

இந்திய தேசீய இயக்கமும் அரசியலும்

இந்திய தேசீய இயக்கத்திலே மேற்கண்டவாறு பழைய வழக்கங்களின் ஆதிக்கம் ஒருபுறம் இருக்க, மேனாட்டு முறையிலே முன்னேற்றம் அடைந்து சுய ஆட்சி பெற வேண்டும் என்ற அவாவும் அதனோடு கர்ணப்படுகிறது. ஆரம்பத்திலே ஆங்கிலக் கல்வியானது சர்க்கார் உத்தி யோகத்திற்கும் வக்கீல் வேலைக்கும் பத்திரிகைத் தொழிலுக் கும் வியாபாரஞ் செய்வதற்கும் பயன்படுவதாகவே கொள் ளப்பட்டது. ஆயினும், ஆங்கிலமொழியைப் பயிலப் பயில, அம்மொழியிலுள்ள இலக்கியங்களிலும் ருசி உண்டாயிற்று. இவ்வாறு நேர்வதற்கு அக்காலத்திலே அமைந்த கல்வித் திட்டமும் அனுகூலமாயிருந்தது. அத்திட்டத்தில் இலக் கியப் பயிற்சியே பெரிதும் வற்புறுத்தப்பட்டது. இலக் கியங் கற்றதனால், புது வெள்ளம்போல் புதுக்கருத்துகள் பெருக்கெடுத்தன; பொதுமக்கள் படிப்படியாக பல உரிமை

களையும் பெற்ற விதத்தை இங்கிலாந்தின் சரித்திரத்தைக் கற்று அறிந்தனர்; * எட்மண்ட் பர்க் (*Edmund Burke*), ஜான் ஸ்டூவர்ட் மில் (*John Stuart Mill*) முதலானோர் அரசியலைப்பற்றி விளங்கக் கூறிய கருத்துகளால், கூரிய அறிவும் உற்சாகமும் கொண்ட இந்தியருக்குப் புதிய ஞானம் பிறந்தது. சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலே அவற்றின் அடியாகத் தோன்றிய அரசியற் கொள்கைகளை, இவர்கள் உலகமெங்கும் வழங்கத்தக்க கொள்கைகளென்று கருதினார்கள். தேச முழுவதற்கும் ஆங்கில பாஷை பொதுமொழியாகி, ஆங்கிலத்திலும் தேச பாஷைகளிலும் பத்திரிகைகள் தோன்றவே, அரசியலைப்பற்றிய பேச்சுகளும் வாதங்களும் அதிகரித்தன. இவையெல்லாம், 'லிபரல்' என்றும் 'ராடிகல்' என்றும் 'டெமோகிராடிக்' என்றும் சொல்லப்படும் அரசியற் கட்சிகளின் பாஷையைக் கையாளத் தொடங்கின.

முஸ்லீம் லீக்

சிப்பாய்க் கலகத்திற்குப் பின்பு, முஸ்லீம்களும் ஹிந்துக்களைப் பின்பற்றத் தொடங்கினார்கள். 'ஸர் ஸையத் ஆமத் கான்' போன்றவர்களின் அதிசய ஞானத்தால், 'மேனாட்டுக் கல்வியைப் புறக்கணித்தால், முஸ்லீம்கள் தற்கொலை செய்து கொண்டவர் ஆவர்' என்பதை உணர்ந்தார்கள். அலிகார் சர்வகலாசாலை, பெஷாவரிலுள்ள இஸ்லாமிய கலாசாலை, ஹைதராபாத்திலுள்ள ஊஸ்மானிய சர்வகலாசாலை முதலியன ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளிலே கல்விகற்ற முஸ்லீம் இளைஞர் தங்கள் மதத்திற்கு யாதொரு கெடுதலும் ஏற்படாத முறையிலே ஐரோப்பிய நாகரிகத்தின் பயனை அடைந்தனர். முஸ்லீம்களைச் சேர்த்துக்கொள்ள இசைந்தபோதிலும் ஹிந்துக்களின் ஆதிக்கமே அதிகமாய் அமைந்துள்ள 'இந்தியன் நாஷனல் காங்கிரஸ்' சபையானது ஹிந்துக்களுக்கு உதவுவது போல, முஸ்லீம்களுக்கு உதவுவதற்கென்று முஸ்லீம் அறிவாளிகள் 'முஸ்லீம் லீக்' என்னும் சபையை ஸ்தாபித்தார்கள்.

* இவர்கள் 18, 19-ம் நூற்றாண்டுகளில் சுதந்தரத்திற்காகப் போராடிய ஆங்கிலேய அரசியல் நிபுணர்கள்.

இந்திய தேசீய இயக்கமும் பிரிட்டனின் கோள்கையும்

பிரிட்டிஷார் இந்தியாவிலே அரசு செலுத்தத் தொடங்கிய காலந் தொட்டே, அரசியல் சம்பந்தமான பேச்சுகளிலும் கொள்கைகளிலும் இந்தியரின் புத்திக் கூர்மையும் புத்தகப் படிப்பும் விளங்கினவே யொழிய, காரியத்திலே இவை பயன்படவில்லை என்று ஆங்கிலேயருள் பலர் கண்டித்திருக்கிறார்கள் ; 'இந்தியர்கள் சுய ஆட்சிவேண்டும் என்கிறார்கள் ; ஆனால் சில அடிப்படையான விஷயங்களில் இவர்கள் நினைப்பது தவறு' என்கிறார்கள். முதலாவதாக, வெளி நாட்டிலிருந்து அபாயமும் உள்நாட்டுக் கலகமும் நேராமல் தேச முழுவதும் தானாகவே அமைதி பெற்றிருக்கும் என்று இவர்கள் நினைப்பது தவறு; அரசாட்சி என்னும் யந்திரம் எவருடைய மேற்பார்வையுமின்றியே தானாக ஓடும் என்று நினைப்பதும் தவறு; பல வகுப்புகளாகப் பிரிவுபட்ட இந் நாட்டிலே ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமைகளை நடுநிலைதவறாமல் வழங்குவதற்குத் திறமையோ பயிற்சியோ தேவையில்லை என்று நினைப்பதும் தவறு.

இந்திய தேசீய இயக்கத்தைப்பற்றி பிரிட்டிஷார் கொண்டுள்ள அபிப்பிராயமானது, சிற்சிலவேளைகளிலே சந்தேகமும் தடுமாற்றமும் அடைந்தாலும், பொதுவாக ஒரே வகையாகவே இருந்து வருகிறது. இந்திய மக்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுய ஆட்சி அளிக்கவேண்டும் என்பதே பிரிட்டனின் கருத்து. *1892*, *1909*, *1919*, (எல்லாவற்றிற்கும் மேலாக) *1935*, இவ்வருஷங்களிலே அரசியலில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் இக்கொள்கையின் பயனாகவே எழுந்தன. இந்தியப் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து விளக்கமாக எழுதிய நூல்களைப் பதிப்பித்து ஆங்கிலம் அறிந்த மக்களுக்கு உதவியதும் இக் கொள்கையின் பயனே ஆகும். (இவ்வகை நூல்களுள் சிறந்து விளங்குவன, *1918* வருஷத்து மாண்டெகு-செம்ஸ்போர்ட் அறிக்கையும், *1930* வருஷத்து 'ராயல் கமிஷன்' அறிக்கையும்.) இந்தக் கொள்கையின் காரணமாகவே, *1930-1* வருஷத்து வட்டமேஜை

மகா நாடு கூடுவதாயிற்று. அரசியல் நிபுணர்களான பிரிட்டிஷாரும் இந்தியரும் சம அந்தஸ்துப்பெற்று, உடன் இருந்து, தேசிய வுணர்ச்சியை எவ்வாறு திருப்திசெய்வது என்றும் செயல் முறையிலே ஏற்படக்கூடிய சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது என்றும் ஆராய்ந்து ஒரு புதியதிட்டத்தை அமைக்க முயன்றனர்; பிரிட்டனது ஆட்சிக்கு உட்படாத இந்திய மன்னர்களின் பிரதிநிதிகளும் இந்த வட்டமேஜை மகா நாட்டிலே கலந்து மந்திராலோசனை செய்தார்கள்.

இந்திய சம்ஸ்தானங்கள்

இந்தியாவிலே மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட நிலப்பகுதி பல சம்ஸ்தானங்களாகப் பிரிவுப்பட்டு பல இந்திய மன்னர்களால் ஆளப்பட்டு வருகிறது. பிரிட்டிஷார் இந்தியாவிலே அரசுரிமை பெறும்போது, பல முஸ்லீம் மன்னர்களும் ஹிந்து மன்னர்களும் அவர்களோடு உடன்படிக்கைகள் செய்துகொண்டு அவர்களுக்கு உதவிபுரிந்தார்கள். இந்த உடன்படிக்கைகளின்படி, இம்மன்னர்களுக்கு உள்நாட்டு அதிகாரத்தில் யாதொரு குறைவும் இல்லை. வெளி நாட்டு விவகாரங்களிலோ இவர்களுக்கு சுதந்திரம் இல்லை; பிரிட்டிஷார் மூலமாகவே் விவகாரங்களை நடத்தவேண்டும். சிப்பாய்க் கலகத்திற்குப்பிறகு, இந்தியாவிலே மத்திய அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்டபோது, இந்திய சம்ஸ்தானங்கள் இவ்வதிகாரத்திற்கு உட்படாது விலகிவிட்டன. அதனால், பிரிட்டிஷ் இந்தியா அடைந்த முன்னேற்றத்தை இவை பெறவில்லை. பிரிட்டிஷ் இந்தியா அரசியல் துறையில் முன்னேற்றம் அடைவதிலே, இந்திய சம்ஸ்தானங்கள் இருபதாம் நூற்றுண்டு தொடங்கிய பின்புதான் சிரத்தை காட்டத் தொடங்கின. இரண்டாவது மிண்டோ பிரபு (1905-10) ராஜப்பிரதிநிதியாக இருந்தபோதுதான், பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்பைப்பற்றி இந்திய மன்னர்களோடு கலந்து ஆலோசனை செய்யப்பட்டது; மகா யுத்தத்திலே சம்ஸ்தானதிபதிகள் செய்த பேருதவிகளால் அவர்களுக்குக் காட்டப்பட்ட கௌரவம் அதிகமாயிற்று. மாண்டெகு 1917-ல் இந்தியா

விற்கு வந்தபோது, இந்திய சம்ஸ்தானுதிபதிகள் தங்கள் கௌரவத்தை விட்டுக்கொடுக்காத வழியிலே பிரிட்டிஷ் இந்தியாவோடு ஒன்றுசேர்ந்து, ஒரு சமஷ்டித் திட்டத்தைக் கையாளலாம் என்ற எண்ணம் பல சுதேச மன்னர்களுக்கு இருப்பதை அவர் அறிந்தார். இந்த எண்ணம் நிறைவேறுவது சாத்தியமா என்று ஆராய்வதற்கு மன்னர் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே சம்ஸ்தானங்களுக்குரிய பொது விஷயங்களையும் அவற்றிற்கும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் உள்ள சம்பந்தங்களையும் ஆராய்ந்தார்கள். இதன் பயனுகவும், பிரிட்டிஷ் இந்தியாவில் எழுந்த அரசியற் கிளர்ச்சிகளால் சம்ஸ்தானப் பிரஜைகளின் அபிப்பிராயங்கள் மாறிக்கொண்டிருப்பதாலும், சமஷ்டி சம்பந்தமான ஆராய்ச்சி அதிகமாயிற்று. சம்ஸ்தானுதிபதிகளிலே ஒரு சிலரைப் பொறுக்கியெடுத்து, அவர்களைக் கொடுங்கோல் அரசர்கள் என்று கண்டனஞ்செய்து, சம்ஸ்தானுதிபதிகள் அனைவருமே பிரிட்டிஷ் அதிகாரிகளோடு சேர்ந்துகொண்டு பிரிட்டிஷ் இந்திய மக்களுக்குத் துரோகஞ் செய்கிறுர்கள் என்று சில தீவிரவாதிகள் குறை கூறுவார் ஆயினர். இவ்வாறு கூறப்படும் குற்றங் குறைகளைப்பற்றி இங்குச் சிறிது கூறுதல் அவசியம். சம்ஸ்தானுதிபதிகள் சுயேச்சாதிகாரம் செலுத்துகிறுர்கள் என்பது உண்மையே. அதாவது 'பார்லிமெண்ட்' போன்ற ஜனப்பிரதிநிதிகள் கொண்ட சபையோரால் நியமிக்கப்படும் மந்திரிகளின்மூலம் அரசாட்சி நடைபெறவில்லை. ஆனுலும், இவர்கள் கொடுங்கோலரசர்கள் ஆகமாட்டார்கள் : தலைமுறை தலைமுறையாக வந்த நீதி முறைகளின்படி இவர்கள் அரசு செலுத்துகிறுர்கள். இந்த நீதி முறைகளை இவர்களது பிரஜைகளும் நன்கறிவார்கள். அனுபவமும் திறமையும் வாய்ந்த மந்திரிகளின் உதவியும் இவர்களுக்கு உண்டு. மேலும், அரசாங்க நடவடிக்கைகளைக் கவனித்துவர ஜனப் பிரதிநிதிகள் கொண்ட சபைகளும் பல சம்ஸ்தானங்களில் இருக்கின்றன. விஸ்தீர்ணத்தாலே சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஒப்பான சம்ஸ்தானங்களிற் சில, பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களோடு ஒப்பு நோக்கினுலும் யாதொரு குறையும் கூற இயலாத முறையிலே அரசாங்கத்தை நடத்துகின்றன.

சிறிய சம்ஸ்தானங்கள் அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லையென்றாலும், பொதுவாக நோக்குமிடத்து, இவற்றிலும் பிரஜைகளுக்கு அதிக அதிருப்தி இல்லை. பிரிட்டிஷ் இந்திய மக்களின் உரிமைகளை பிரிட்டிஷார் மறுப்பதற்கு இவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதும் தவறு. பிரிட்டிஷ் மன்னரோடுள்ள சம்பந்தம் அற்றுப்போவதை இவர்கள் விரும்பவில்லை என்பதும், இவர்களும் கலகங்களை விரும்பாதவர்களாதலால், கலகங்களை பிரிட்டிஷார் அடக்க முயலும்போது இவர்கள் துணைபுரிகிறார்கள் என்பதும் உண்மையே. மற்றப்படி, இவர்களுக்கும் தேச பக்தியுண்டு. 'காமன் வெல்த்' என்னும் சுய ஆட்சிபெற்ற நாடுகளின் சமூகத்திலே இந்தியநாடு உயர்ந்த பதவியைப் பெறப்போகும் நாளை இவர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இவர்களுக்கும் இந்திய சர்க்காருடன் அபிப்பிராயபேதமும் மனஸ்தாபங்களும் உண்டு. அரசாங்க வேலைகளைச் சௌகரியமாக நடத்துவதற்காகவும் அகில இந்தியாவின் செல்வ நிலையைச் சீர்திருத்துவதற்காகவும், உடன்படிக்கைகளாற்பெற்ற இவர்களது உரிமைகளை விட்டுக்கொடுக்கும்படி இந்திய சர்க்கார் பலவந்தஞ் செய்கிறார்கள் என்று இவர்களும் குறை கூறுகிறார்கள்.

1935-ஆம் வருஷத்து கவர்ண்மேன்ட் அவ் இந்தியா ஆக்ட்

வட்டமேஜை மகாநாட்டினை மூன்றுதடவைகூட்டி ஆலோசனைகள் செய்து, பலருடைய அபிப்பிராயங்களையும் அறிந்து அவற்றிலே கூடுமான அமிசங்களை ஏற்றுக்கொண்டு, மிகவும் பிரயாசைப்பட்டும் தீர்க்காலோசனை செய்தும் ஓர் அரசியல் திட்டத்தைத் தோற்றுவித்தார்கள். அதுவே 1935-ஆம் வருஷத்து இந்திய அரசாட்சிச் சட்டமாயிற்று. இப்புதிய அரசியல் திட்டத்திலே மூன்று முக்கியமான கொள்கைகள் அமைந்துள்ளன. இக்கொள்கைகளைப் பற்றி அபிப்பிராய பேதம் ஒன்றும் இல்லை. சமஷ்டிவேண்டும், சமஷ்டியிற் சேர்ந்த தனி நபர்களுக்குச் சுதந்திரம்வேண்டும், மத்திய

ஆட்சி பொறுப்பாட்சியாக அமைதல்வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இக் கொள்கைகளைப் பின்பற்றுவதிலே தான் அபிப்பிராய பேதங்கள் எழுந்தன. புதுச் சட்டத்திலே விவரிக்கப்பட்ட திட்டங்களை அங்கீகரிப்பார் யாரும் இல்லை. 'சமஷ்டியரசாங்கம் ஆதிக்கம் பெற்றால் உடன்படிக்கைகளின்படி தங்களுக்கு இருக்கும் உரிமைகளை இழக்கநேரும்' என்று சம்ஸ்தானாதிபதிகள் பயப்பட்டார்கள். 'காங்கிரஸ்' சபை 'பூர்ண சுதந்திரமேவேண்டும்' என்று ஏற்கெனவே நிச்சயித்து விட்டதால், அச்சபையால் புதுச் சட்டத்தை ஏற்க முடியவில்லை. சட்டத்திலே கூறப்பட்ட சமஷ்டி யரசாங்கத்திற்குப் பொறுப்பு இல்லை என்றும், பிரிட்டன் தன் அதிகாரம் நிலைப்பதற்கே இந்திய சம்ஸ்தானங்களைத் தந்திரமாக சமஷ்டியிற் சேர்த்துக் கொண்டது என்றும் குறைகூறுகிறார்கள். முஸ்லீம்களோ மத்திய ஆட்சித் திட்டங்களால் ஹிந்துக்களின் ஆதிக்கம் இன்னும் அதிகமாகிவிடுமே என்று கவலைப்படுகிறார்கள்; சம்ஸ்தானாதிபதிகளிலே பெரும்பாலோர் ஹிந்துக்களாக இருப்பதால், சம்ஸ்தானங்களை சமஷ்டியிற் சேர்த்துக் கொள்வதில் இவர்களுக்கும் விருப்பம் இல்லை. புதுச்சட்டப்படி நடந்த முதலாவது தேர்தலிலே, முஸ்லீம்கள் நான்கு மாகாணங்களிலே தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டார்கள். 'முஸ்லீம் லீக்' சக்திவாய்ந்த ஸ்தாபனமாகிவிட்டது. ஹிந்துக்களின் ஆதிக்கத்தைத் தடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் முஸ்லீம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதனையே ஆதரிக்கிறார்கள். ஜனத்தொகை அதிகம் இல்லாத மற்றைச் சாதியினரும் மற்றைய மதத்தினரும் தங்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இச்சட்டத்திலே அமைக்கப்பட்ட நிபந்தனைகள் திருப்திகரமாக அமையவில்லை என்கிறார்கள்; முஸ்லீம்களைப் போலவே, இவர்களும் 'ஹிந்துக்கள் ஆதிக்கம் அடைவார்களோ' என்று அஞ்சுகிறார்கள்.

இப்பொழுது நடக்கும் மகாயுத்தத்தால் உண்டான குழப்பங்களால், இவ்விதக் கவலைகளும் அச்சமும் அதிகரித்துவிட்டன. ஆகையால் 1935 வருஷத்துச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரு முன்பே, அதிலுள்ள திட்டங்களை

மாற்றியமைக்கவேண்டியிருக்கும். ஆனால், சமாதானமும் உள்நாட்டு அமைதியும் ஏற்பட்ட பின்பு, இந்தியருக்குச் சுய ஆட்சி அளிக்கும்போது, இந்தியாவிலே என்றும் அமைதி நிலைத்திருப்பதற்கு வேண்டிய பந்தோபஸ்துகள் இச் சட்டத்திலே அமைந்துள்ளன; நிச்சயமாய் இந்தியா சுய ஆட்சியைப் பெறும் வழியிலே முன்னேறிச் செல்கிறது என்றே பிரிட்டன் நம்புகிறது; ஆனால் வெளிநாட்டுச் சச்சரவுகளுக்கும் உள்நாட்டுக் கலகங்களுக்கும் இடங் கொடுக்கக்கூடாது; அப்பொழுதுதான் அகில இந்திய காரியங்களைச் சரிவரச் செய்து முடிக்கக்கூடிய சுதேச அரசாங்கம் தோன்றும்; இத்தகைய அரசாங்கம் ஒன்றை அமைக்கலாம் என்ற எண்ணமே புதிது; ஆகையால், அவ்வெண்ணம் நிறைவேறுவது அரிது. மீண்டும் இந்தியா சிதறுண்டு பல சிற்றரசுகளாகப் பிரிவதற்கு, பெரிய கிளர்ச்சியோ நீடித்த கலகமோ வேண்டியதில்லை. உள்நாட்டு அமைதிநிலை சற்றுக் குலைந்தாலும் போதும். இந்திய சரித்திரத்தைக் கற்பதால் எதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் என்றால், பிரிட்டிஷாரின் பாதுகாப்பு நீங்கினாலும் அவர்களுடைய ஆதிக்கம் குறைந்தாலும், வெளிநாட்டுப் படையெடுப்புகளாலும் உள்நாட்டுக் குழப்பங்களாலும் இந்தியாவானது ஒன்றுபடாத பல சிற்றரசுகளாகச் சிதறுண்டு போகும் என்பதே.

இத்தகைய நிலைமையிலுள்ள இந்தியாவிலே, சென்ற நூறுவருஷங்களுக்குள்ளே அரசியல் முறையானது படிப்படியாகப் பல சீர்திருத்தங்களைப் பெற்று 'பார்லிமெண்ட்' சபை போன்ற சட்டசபைகளால் நடத்தப்பெறும் ஜனநாயகமாக மாறிவருவது அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியே. பிரிட்டிஷ் அரசாட்சியைப் பற்றி என்ன குற்றங் குறைகள் கூறப்பட்டாலும், ஒன்றைமட்டும் உண்மையென்று ஒப்புக் கொள்ளாதிருக்க முடியாது. அதாவது, இந்தியாவிலே இதற்குமுன் பலர் அரசு செலுத்தியிருப்பினும், தேசம் முழுவதையும் ஒன்றுபடுத்தி, அது சுய ஆட்சி பெறுவதற்கான வழியைக் காட்டிய அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கமேயாகும் என்பதே.

PRINTED IN INDIA AT
THE INTERNATIONAL PRINTING WORKS, NUNGAMBAUKAM, MADRAS

இந்தியாவின் ஜனத்தொகை	33,81,71,000
ஹிந்துக்கள் மட்டும்*	23,86,24,000 = 71%
முஸ்லீம்கள் மட்டும்	7,70,93,000 = 23%
மற்றைய மதத்தினர்	2,24,54,000 = 6%

* ஒதுக்கப்பட்ட (அல்லது, தாழ்த்தப்பட்ட) வகுப்புகள் என்னும் தலைப்பின்கீழ் வரும் 5,16,54,000 ஜனங்களையும் சேர்த்து.

பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள்

அஸ்ஸாம்	ஜனத்தொகை	86,22,000
வங்காளம்	,,	5,01,14,000
பீஹார்	,,	3,23,72,000
பம்பாய்	,,	1,80,44,000
மத்திய மாகாணங்களும் பிராரும்	,,	1,52,23,000
மதராஸ்	,,	4,52,36,000
வடமேற்கெல்லை மாகாணம்	,,	24,25,000
ஒரிஸ்ஸா	,,	69,05,000
பஞ்சாப்	,,	2,35,81,000
ஸிந்து	,,	38,87,000
ஐக்கிய மாகாணங்கள்	,,	4,84,09,000

(இவையெல்லாம் 1931-வது வருஷத்து ஜனசங்கைக் கணக்கின்படி)

இந்தியா

இச் சிறுநூலின் நோக்கம் என்னவென்றால், இந்திய சமாசாரங்கள் நன்றாக விளங்குவதற்கான அடிப்படையான அமைப்புகளைத் தெரிவிக்கவேண்டும் என்பதே. இந்திய தேசீய இயக்கமானது எவ்வாறு வளர்ந்து விருத்தியடைந்தது என்பதையும், ஹிந்துக்கள், முஸ்லீம்கள், இந்திய சம்ஸ்தானாதிபதிகள் ஆகிய இவர்கள் நாகரிகத்தை யொட்டியும் அரசியலை யொட்டியும் கொண்டுள்ள வெவ்வேறு வகைப்பட்ட அபிப்பிராயங்களையும் இந்நூல் விவரிக்கின்றது. இந்தியப் பாதுகாப்பைப் பற்றிய பிரச்சினைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதும், சாதி, மதம், பாஷை இவற்றிலேயுள்ள பல மாறுபாடுகள் அரசியலொற்றுமை ஏற்படாதபடி எவ்வாறு க[illegible] செய்கின்றன என்பதும் இந்நூலிலே வற்புறுத்தப்படுகின்றன. முடிவாக, 1935-வது வருஷத்து 'கவர்ண்மென்ட் அவ் இந்தியா ஆக்ட்' வரையிலும் இந்தியா படிப்படியாக 'டொமினியன்' பதவி பெறுவதற்கான வழியிலே முன்னேறி வருகிறது என்பதும் விவரிக்கப்பட்டுள்ளது.

'ப்ரொவஸர் ரஷ்ப்ருக் வில்லியம்ஸ்' 'ஆக்ஸ்போர்ட்'டிலுள்ள (*All Souls' College*) 'ஆல்ஸோல்ஸ்' கலாசாலையில் (*Fellow*) ஆசிரியராக இருந்தவர்; பின்பு, அல்லாஹபாத்திலே இந்தியாவின் தற்கால சரித்திரத்தைப் போதிக்கும் பேராசிரியராக இருந்தவர். 'நெல்ஸன்' கம்பெனியார் (*Messrs Nelson*) பதிப்பித்துள்ள 'விமர்சன நூல்கள்' ('*Discussion Books*') என்னும் நூல் வரிசையிலே 'இந்தியாவின் கதி என்ன?' ('*What About India?*') என்னும் நூலை இயற்றியுள்ளார். அந்நூல், இச் சிறுநூலிலே சுருக்கமாகச் சொல்லப்படும் விஷயங்களைப்பற்றி அதிகமாக அறிய விரும்புவோர்க்குப் பயன்படக்கூடும். அந்நூலிலுள்ள விஷயங்களை இச் சிறுநூலிலே உபயோகித்துக்கொள்ள அனுமதி தந்த பதிப்பாளருக்கு இதனைப் பதிப்பித்தோர் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

INDIA

Translated from

INDIA, by L. F. Rushbrook Williams

(*Oxford Pamphlets on World Affairs No. 32*)

OXFORD UNIVERSITY PRESS

As. 3